Registered as a News Paper

16 MAR 1999
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 பங்குனி02செவ்வாய்க்கிழமை(16-03-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்93

## திருக்கேதீஸ்வரத்திலிருந்து ஞாயிறன்று படை நகர்வு!

### மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையாம்

கொழும்பு, மார்ச் 16

மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரத்தில் இருந்து வடக்கு நோக்கி மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை படையினர் நேற்று முன்தினமிரவு மேற்கொண்டனர் என்று படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

திருக்கேதீஸ்வரத்தில் இருந்து படையினர் முன்னேறி வடக்கே மூன்று மைல் தூரத்தில் உள்ள பாப்பாமடு பிரதேசத்தைக் கைப்பற்றினர் என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட மோதலில் 3 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன் 11 பேர் காயமடைந்ததாகவும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

### செய்தியாளர் கடத்தல்

## இராணுவ பிரிகேடியர் கைதாகி விசாரணை!

கொழும்பு, மார்ச் 16

'லக்பிம' சிங்கள வார இதழின் பாதுகாப்புத்துறை செய்தியாளர் சிறிலால் பிரியந்த கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இராணுவத்தைச்சேர்ந்த பிரிகேடியர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இராணுவ அதிகாரி மீதான விசாரணையைப் படையினர் ஆரம்பித்துள்ளதாகவும் —

பூர்வாங்க விசாரணைகளை அடுத்து இராணுவ நீதிமன்ற விசாரணைகளை நடத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் புலிகளுடனும் பேச்சு நடத்துங்கள்!

## தமிழ்க் கட்சிகள் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

"இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்பட வேண்டுமானால் அரசாங்கம் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் புலிகளுடனும் பேச்சு நடத்த வேண்டும்."

கொழும்பில் நேற்று இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் பல தமிழ்க் கட்சிகளினதும் பிரதிநிதிகள் இவ்வாறு கருத்து வெளியிட்டனர்.

தேசிய கத்தோலிக்க நீதி, சமாதான ஆணைக்குழு மற்றும் சமூக, பொருளாதார அபிவிருத்தி மன்றம் (செடக்) ஆகியவை நேற்று தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய சந்திப்பிலேயே இவ்வாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் புளொட் சார்பில் த. சித்தார்த்தன், எஸ். பாலச்சந்திரன், ஈ. பி. டி. பி. சார்பில் சிவதாஸன், தங்கவேல், சந்திரகுமார், ரெலோ சார்பில் அடைக்கலநாதன் (செல்வம்), தமிழர் விடுதலைக் கூட்டணி சார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா குருமண்காடு

## கிராம அலுவலரின் வீடு மீது குண்டு வீச்சு

வவுனியா, மார்ச் 16

வவுனியா குருமண்காடு பகுதியில் உள்ள கிராம அலுவலர் ஒருவரின் இல்லத்தின் மீது நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இனந்தெரியாதோர் கிரனேட் வீசித்தாக்கி உள்ளனர்.

வீட்டின் மீது இரண்டு கிரனேட்டுக்கள் வீசப்பட்டுள்ளன. இதனால் வீட்டின் சுவர்களுக்கு சேதம் ஏற்பட்டது. எனினும் வீட்டில் இருந்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக நேற்று மாலை வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

### ஈழத்தமிழர் மீதான தாக்குதலை கண்டித்து

## சென்னையில்இலங்கை தூதரகம்முன் இன்று சவப்பெட்டியுடன் பேரணி

சென்னை, மார்ச் 16

சென்னையில் உள்ள இலங்கை துணைத்தூதரகத்துக்கு முன்பாக சவப்பெட்டிகளைத் தாங்கியவாறு இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த பாட்டாளி மக்கள் கட்சி ஏற்பாடு செய்துள்ளது:

இலங்கையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள் இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர்நடத்திவரும் தாக்குதல்கள் ஆகியவற்றைக் கண்டித்தும்—

இவற்றைத் தடுத்து நிறுத்த சர்வதேச சமூகத்தை தலையிடுமாறு கோரியும்—

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படுவதாகபாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் தீரன் தெரிவித்தார்.

இன்று முற்பகல் 11மணிக்கு காயிதேமில்லத் கல்லூரியில் இருந்து சவப்பெட்டி பேரணி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழு முன் நேற்று 12 பேர் சாட்சியமளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள யாழ்ப்பாணம் வந்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று யாழ். செயலகத்தில் தனது விசாரணைகளை ஆரம்பித்தது.

நேற்றைய விசாரணையில் 12 பேர் சாட்சியமளித்தனர்.

காணாமற்போனோர் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் இருந்து நேற்றைய விசாரணைகளுக்கு 15 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் 10 பேர் நேற்று சமுகமளித்து சாட்சியமளித்தனர். ஏனைய இருவரும் இன்று விசாரணைகளுக்குச் சமுக மளிக்க வேண்டியவர்கள் எனினும் அவர்கள் நேற்றே சமுகமளித்து சாட்சியமளித்தனர்.

விசாரணைகள் தொடர்ந்தும் இன்று யாழ். செயலகத்தில் நடைபெறும்.

இந்த ஆணைக்குழுவினர் நாளை ஊர்காவற்றுறையில் விசாரணைகளை மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6)

## உதவிப் பணிப்பாளர் பிணையில் விடுவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 16

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்து சமய கலாசார விவகாரத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சீனித்தம்பி தெய்வநாயகம் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த ஆண்டு ஜூலை 15

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளை அனுப்பும் சூழ்நிலை இங்கு இல்லை

### நோர்வே குழு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 16

நோர்வேயில் உள்ள இலங்கை அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் சூழ்நிலை தற்போது இங்கு இல்லை. இது குறித்து நாம் நோர்வே அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறுவோம்.

இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்துள்ள நோர்வே நாடாளுமன்றத் தூதுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு ஓஷியானிக் ஹோட்டலில் நாடாளுமன்ற விவகாரக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற விருந்துபசார நிகழ்ச்சி ஒன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 15 இலங்கை மீனவர்கள் இந்தியக்கடலில் கைது!

சென்னை மார்ச் 16

இந்தியக் கடற்பிராந்தியத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 15 இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட இந்த 15 மீனவர்களும் கடற்படையினரால் கொச்சி துறைமுக பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் தொடர்பான

## அனைத்துக் கட்சி கூட்டம் நாளையே நடைபெறும்

கொழும்பு, மார்ச் 16

மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பாக இன்று ஜனாதிபதி தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற இருந்த கட்சித் தலைவர்களின் விசேட கூட்டம் நாளை புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் பலாலி வீதியில் சகல வசதிகளுடன் கூடிய விலாசமான, நவீன வீடு, ஆறு பரப்புக் காணியுடன் உடனடியாக விற்பனைக்குண்டு. 12 அடிக்கும் கூடிய பாதையுடன் மூன்று துண்டுகளாகவும் பிரித்து படம் வரையப்பட்டுள்ளது. நேரில் பேசித் தீர்த்துக்கொள் ளலாம்.

தொடர்பு கொள்ளவும்:-

சி. கு. பிரபாகரன்
கணக்காய்வு உப அலுவலகம்,
மாநகர சபைக்கட்டடம், நல்லூர், யாழ்ப்பாணம்.
(63897)



## ST. PATRICK'S DAY (OBA)

17-03-99 பாதுகாவலர் தினத்தைக் கொண் டாடும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர், ஆசிரியர் கள் மாணவர்களைப் பழைய மாணவர் சங்கத்தினர் வாழ்த்துகின்றனர்.

குறிப்பு:- நாளை நடைபெறும் திருப்பலியிலும் தொடரும் நிகழ்வுகளிலும் தங்கள் துணை வியர் சகிதம் கலந்து கொள்ளுமாறு OBA உறுப்பினர்களை அதிபர் அழைத்துள்ளார்.

செயலாளர் (OBA)

(63898)



## கே. சி. சி. சி. வெற்றிக்கிண்ணம்-1999

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினால் வருடா வருடம் நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட (30) ஓவர்கள் கொண்ட சுற்றுப்போட்டியினை இந்த ஆண்டும் நடத்தத் தீர்மானித்துள்ளோம். J. D C A. இல் உறுப்புரிமைபெற்ற அணிகளிடம் விண்ணப்பம் கோரப்படுகிறது.

விண்ணப்ப முடிவு திகதி:
20 - 03 - 1999 சனிக்கிழமை

அணி ஒழுங்குத் தெரிவு:
21 - 03 - 1999 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 4-00 மணிக்கு (S L. T)

போட்டி நுழைவுக்கட்டணம்: 300 ரூபாய்

சுற்றுப்போட்டி ஆரம்ப திகதி:
27 - 03 - 1999 சனிக்கிழமை

செயலாளர்
கே. சி. சி. சி. விளையாட்டுக் கழகம்
கொக்குவில். (63900)


## மரண அறிவித்தல்கள்

அருட்சகோதரி
### இமாக்குலாற்றா

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பாசையூர் திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் வசித்த வருமான அருட்செல்வி இமாக்குலாற்றா நேற்று (15-03-99) காலமானர்.

இவரது பூதவுடல் நாளை (17 - 03 - 99) காலை 8 மணிக்கு பிரதான வீதியில் உள்ள திருக்குடும்ப மாகாண இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியாள் பேராலயத்தில் நல்லடக்கத் திருப்பலி யின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்;
அருட்சகோதரி அருள்
பாசையூர் கன்னியர் மடம். (சி/6792)

### பாலச்சந்திரன் ஸ்ரீவரதராஜன்
(ஓய்வுபெற்ற மருந்தாளர்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் ஸ்ரீவரத ராஜன் அவர்கள் 15-3-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலச்சந்திரன் - செல் லம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ் சென்ற சுப்பிரமணியம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகீஸ்வரி (விவாக, பிறப்பு இறப்பு பதிவாளர்) அவர்களின் அன்புக் கணவரும் யோகராஜன் (எழுதுவினைஞர், வடக்கு - கிழக்கு மாகாணசபை), பிரசாந்தன் (பேராதனைப் பல்கலைக் கழக கலைப் பிரிவு மூன்றாம் வருட மாணவன்), யோக லட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்ற சந்திரபாலன், சற்குணம் (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி யோ. ஸ்ரீவரதராஜன்
(மனைவி)
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (63899)

## பவள விழா கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 16

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பவள விழாவை முன்னிட்டு மூன்று நாள் வதிவிடக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது.

திருநெல்வேலியில் உள்ள மேற்படி சங்கத்தின் கேட்போர் கூடத்தில் அடுத்த மாதம் 16 ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு காலை 9 மணி முதல் மாலை 5.30 மணிவரை இக் கருத்தரங்கு இடம்பெறும்.

மேற்படி வதிவிடக் கருத் தரங்கில் பல்வேறு விடயங் கள் பற்றி ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7- 103)


ராஜா
யாழ்ப்பாணம்.
கார்த்திக் - தேவயானி
ரசிகா, அஞ்சு அரவிந்த்
ஜனகராஜ், மணிவண்ணன்
மற்றும் பலர் நடித்த
உ தவிக்கு வரலாமா
இன்று காட்சிகள்
10-30, 2-30.
(சி/6663)



நாகம்ஸ்
சுன்னாகம்
விஜய், விஜயகாந்த்,
யுவராணி, கௌதமி
நடித்த
செந்தூரபாண்டி
புதிய நேரப்படி காட்சிகள்
11-00, 2-30
(63856)



லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
இன்று
சிவாஜி - பத்மினி
கே. ஆர். விஜயா
நாகேஷ், பாலாஜி
நடித்த
இரு மலர்கள்
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070-212223
(63680)


NOTICE

UNIVERSITY of JAFFNA, SRI LANKA.

FACULTY of MEDICINE

Commencement of Para - Clinical Lectures for the 18 th Batch

The Para - Clinical Lectures for the 1995 batch (18 th) will commence on 19 th April 1999.

- Registrar
(C/6789)

## சிப்பாய்களுக்கு வழங்கிய சம்பளத்தில் போலி நோட்டு

கொழும்பு, மார்ச் 16

மாதுறுஓயாவிலுள்ள அதிர டிப்படை பயிற்சி முகாமில் சிப்பாய்களுக்கு வழங்கப் பட்ட சம்பளப் பணத்தில் போலி ஆயிரம் ரூபா நோட்டு கள் அடங்கியிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சிப்பாய்களுக்கு வழங்கப் பட்ட பெப்ரவரி மாதச் சம் பளப் பணத்தில் போலி ஆயி ரம் ரூபா நோட்டுகள் 10 இருந்தது கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. இந்த நோட்டுகள் அனைத்தும் ஒரே இலக்கத் தைக் கொண்டிருந்தன.

பெப்ரவரி மாதச் சம்பளத் தில் இரண்டாயிரம் ரூபாவை வங்கியில் வைப்பிலிட சிப் பாய் ஒருவர் சென்றபோது அதில் ஒரு நோட்டு போலி நோட்டாக இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதை அடுத்து பொலீஸாரி டம் விடுக்கப்பட்ட முறைப் பாட்டை அடுத்து அந்த முகாமில் சம்பளம் பெற்ற ஏனைய சிப்பாய்களின் பணத் தையும் பரிசீலித்தபோது மேலும் 9 போலி ஆயிரம் ரூபா நோட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டன.

இந்த முகாமுக்கான சம் பளப் பணம் மாத்தளையில் நாவலவில் உள்ள அதிரடிப் படைத் தலைமையகத்தில் இருந்து அனுப்பிவைக்கப் பட்டதாகத் தெரியவந்துள் ளது.

(ஐ-10)

## கணக்காளர் நியமனம்

சாவகச்சேரி, மார்ச் 16

சாவகச்சேரி நகர சபைக்கு கணக்காளராக ஆ: ஞான தேவி இம்மாதம் முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட் டுள்ளார்.

இவர் திருகோணமலை நகரசபையில் இருந்து இட மாற்றம் பெற்றுள்ளார்.

மேற்படி நகர சபையில் கணக்காளராகப் பணியாற் றிய பி. சின்னத்துரை ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக் கது

(க-31-117)

## பஸ் தரிப்பு நிலையங்கள்

தென்மராட்சி மார்ச் 16

சாவகச்சேரி நகரசபை எல் லைக்குட்பட்ட நுணாவில் சந்தியிலிருந்து மீசாலை புத் தூர்ச் சந்தி வரையிலான கண்டி வீதியின் இருமருங் கிலும் பஸ் தரிப்பிட கம்பங் கள் சாவகச்சேரி நகர சபை யினரால் கடந்த வாரம் நடப்பட்டுள்ளன.

வடபிராந்திய போக்கு வரத்துச் சபையினால் குறிக் கப்பட்ட இடங்களில் இக்கம் பங்கள் நடப்பட்டுள்ள தாக நகரசபைச் செயலாளர் தெரிவித்தார். (ஐ-117)

## சைக்கிள் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

உரும்பிராயில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் சைக் கிளில்சென்ற ஒருவர் காய மடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த பத்ம நாதன் கணேசமூர்த்தி (வயது 25) என்பவரே தலை யில் காயமடைந்தவராவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டுள் ளார்

(ஐ-15)

## செத்தல் மிளகாய் விலை மேலும்வீழ்ச்சி

தென்மராட்சி, மார்ச் 16

சாவகச்சேரி சந்தைக்குப் பெருமளவு செத்தல் மிளகாய் விற்பனைக்கு வருவதால் மிளகாயின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

மாத ஆரம்பத்தில் கிலோ ரூபா 280 வரை விற்கப்பட்ட செத்தல் மிளகாய் 125 ரூபாவாக விற்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதி விவ சாயிகளால் உற்பத்தி செய் யப்பட்ட செத்தல் மிளகாயும் கப்பலில் கொண்டுவரப்பட்ட செத்தல் மிளகாயும் பெரு மளவு விற்பனைக்கு வருவதே விலை வீழ்ச்சிக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

(இ—117)

## கிணறுகளுக்குக் குளோரின்

தென்மராட்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யின் கீழ் உள்ள கெற்பலி, பலாலி, வடக்கு, தெற்கு விடத்தற்பளை ஆகிய கிரா மங்களில் உள்ள குடிதண்ணீர் கிணறுகளுக்குக் குளோரின் இடப்பட்டு வருகிறது.

அப்பகுதி சுகாதாரப்பரி சோதகர் எஸ். தெய்வேந் திரம் தலைமையில் தொண் டர்குழு இப்பணியைச்செய்து வருகின்றது. (ஐ—31)

## மரமுந்திரிகைக் கன்று விநியோகம்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் அனுசர ணையுடன் நல்லூர் பிரதேச சபை தனது எல்லைக்குட் பட்ட விவசாயிகளுக்கு மர முந்திரிகைக் கன்றுகளை நாளை புதன்கிழமை பி. ப. 4-30 மணிக்கு திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலை யத்தில் வைத்து இலவசமாக விநியோகிக்கவுள்ளது.


ஏற்றுமதித் தரத்திலான
லோட்டஸ் ரயர்கள்
(தனிக் சறுப்பு நிறம்)
மொத்தமாகப் பெற
விவேகானந்தா அச்சகம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/6790)


## ஆத்மார்த்த அஞ்சலி

கொக்குவிலைச் சேர்ந்தவரும்
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய
முன்னாள் நிர்வாகசபை செயலாளராக
தொண்டாற்றியவருமான

### அய்யாத்துரை பத்மநாதன்

அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார். அவரது ஆத்மா மஞ்சவனப்பதி முருகனின் பாதாரவிந்தங் களை அடைந்து சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலயத்தொண்டில்

த. கணேசபிள்ளை
தலைவர்

இ. இராசலிங்கம்
செயலாளர்

(சி/6791)

கொ. ம. மு. ஆலய நிர்வாகசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் அதிகாரப் பகிர்வுக்கு தலிபான் - எதிரணி இணக்கம்

## இருவார காலத்தில் பேச்சு ஆரம்பமாகும்

காபூல், மார்ச் 16

**ஆப்கானிஸ்தானில் தலிபான் படையினருக்கும் வடக்கில் நிலை கொண்டுள்ள எதிரணிப் படையினருக்கும் இடையே அதிகாரத்தைப் பகிர இணக்கம் ஏற்பட்டுள்ளது.**

துருக்மேனிஸ்தான் தலைநகர் ஆஸ்காபாத்தில் ஐ.நா.வின் மேற்பார்வையில் இரு தரப்புக்கும் இடையில் நான்கு நாள் நடந்த பேச்சுக்களை அடுத்து இந்த இணக்க நிலை ஏற்பட்டது.

நிர்வாகம், நீதி, நாடாளுமன்ற செயற்பாடு ஆகியவற்றில் இருதரப்பும் அதிகாரங்களைப் பகிர இணங்கியதாகத் தெரிவித்து இருதரப்பினரும் கூட்டாகப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இரு தரப்பும் நல்லெண்ண நடவடிக்கையாக 20 சிறைக் கைதிகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் விடுவிக்கவும் இணங்கியுள்ளன.

அடுத்த இருவார காலத்தில் பேச்சுக்களை இரு தரப்பும் ஆரம்பிக்கவிருக்கின்றன.

சுமுக நிலை உருவாகியுள்ளதையடுத்து ஏழு மாதங்களுக்கு முன்னர் இடை நிறுத்தப்பட்ட ஐ.நா. அதிகாரிகளின் அலுவலகம் மீண்டும் செயற்படவிருக்கின்றது.

எதிரணியின் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு ஆப்கானிலும் பணிபுரிய ஐ.நா. அதிகாரிகள் முன்வந்துள்ளனர் என்று கூறப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலைமையை பாகிஸ்தான் உட்பட பல வெளிநாடுகள் வரவேற்றுள்ளன.

(இ-3)

## கொசோவோ பேச்சுவார்த்தை

திரானா, மார்ச் 16

கொசோவோ பிரச்சினைக்கு தீர்வு காண சேர்பியர்களும் அல்பேனியர்களும் சமாதானப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

இந்தப் பேச்சுக்கள் வெற்றியடைய உதவுவதற்கு அமெரிக்க மற்றும் ஐரோப்பிய சமூக நாடுகள் முன் வந்துள்ளன.

இந்தப் பேச்சுக்கள் இடம் பெறும் நேரத்தில் மூன்று குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்தச்செயலை யார் செய்தார்கள் என்பது தொடர்பான தகவல் வெளிவரவில்லை.

இந்தக் குண்டு வெடிப்பு பேச்சுக்களைப் பாதிக்குமா என்ற கேள்வி தற்சமயம் எழுந்துள்ளது.

(இ-3)

## ஜெயலலிதாவும் தோழி சசிகலாவும் செருப்பினால் தாக்கினார்களாம்

### கணக்காளர் பொலீஸில் முறையீடு

சென்னை, மார்ச் 16

தமிழக முன்னாள் முதலமைச்சரான செல்வி ஜெயலலிதாவும் அவரது தோழியான சசிகலா நடராசனும் சேர்ந்து அவர்களது கணக்காளர் ஆர். ராஜசேகரம் என்பவரைக் குதி உயர்ந்த செருப்பினால் ஒரு மணி நேரம் தாக்கியதாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளானவரின் வலது கண் பாதிக்கப்பட்டதுடன் உடம்பில் பல தழும்புக்காயங்களும் காணப்பட்டன என்று சென்னை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தாம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ராஜசேகரம் பொலீஸில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கடந்த சனிக்கிழமை ஜெயலலிதாவிடம் இருந்து அழைப்பு வந்தது. அந்த அழைப்பை ஏற்று அவரது வீட்டுக்குச் சென்றேன்.

அங்கு சென்றவுடன் ஜெயலலிதா என்னைத்திட்டினார் பின்னர் குதி உயர்ந்த செருப்பால் என்னைத் தாக்கினார்.

அவரது தோழியான சசிகலா நடராசனும், அவரது நண்பரான மகாதேவன் என்பவரும் இந்தத்தாக்குதலில் இணைந்து கொண்டனர்.

''எந்தவித பத்திரத்திலும்கையொப்பம் வைத்துத் தருகிறேன். என்னைத் தாக்காதீர்கள்'' என்று அவர்களிடம் மன்றாடினேன். ஆனால் அவர்கள் விடவில்லை.

ஒரு மணி நேரத்தாக்குதலின் பின்னர் மயங்கிய நிலையில் விடுவிக்கப்பட்ட நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன் — என்று தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை அடுத்து செல்வி ஜெயலலிதா, சசிகலா நடராசன், மகாதேவன் ஆகியோருக்கு எதிராக கொலை முயற்சி வழக்கு ஒன்றை காவல்துறையினர் பதிவு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கற்பனையானது என்றுஜெயலலிதா மறுத்துள்ளார்.

(இ-3)

## கடந்த 3 வருடங்களாக மக்கள் நலன்கள் பாதிப்பு

### சோனியா குற்றச்சாட்டு

புதுடில்லி, மார்ச் 16

இந்தியாவில் கடந்த மூன்று வருடகால ஆட்சியில் மக்கள நலன்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

நாகாலாந்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்,

### உலக அரங்கில்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தற்போதைய ஆட்சியினர் மக்கள் நலனில் அக்கறை காட்டவில்லை. கட்சிகளுக்குள் நடக்கும் உட்பூசலுடனேயே ஆட்சி நகர்கின்றது.

இந்தியாவுக்கு நிலையான ஆட்சி ஒன்றே இன்று தேவை. இந்த ஆட்சியை வழங்கக் கூடியது காங்கிரஸ் கட்சியே ஆகும்.

விரைவில் காங்கிரஸ் நிலையான ஆட்சியை அமைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

இளைஞர்கள் வன்முறைகளில் ஈடுபடாமல் ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

(இ-3)

## புதுடில்லியில் தீ விபத்து; 40 பேர் கருகி மரணம்.

புதுடில்லி, மார்ச் 16

புதுடில்லியில் ஜமுனை ஆற்றுக்கரையில் விஜயகாட்டில் அமைந்துள்ள குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தீ விபத்தில் 40 பேர் உயிரிழந்தனர்; நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர்; ஆயிரம் குடிசைகள் எரிந்து நாசமாகின.

பிளாஸ்டிக் மற்றும் கடதாசிப் பொருள்களைச் சேகரிக்கும் தொழிலாளர்கள் வசிக்கும் அந்தக் குடியிருப்பில் ஏற்பட்ட திடீர்த் தீ விரைவாகப் பரவியதாகவும் —

தீயணைப்புப் படையினர் 4 மணி நேரம் போராடித் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் 28 பேரின் சடலங்கள் நேற்றுக் காலை வரை மீட்கப்பட்டன.

தீ பரவியவுடன் அருகில் உள்ள மசூதி ஒன்றில் மக்கள் தஞ்சம் அடைந்தனர்.

அங்கும் தீ பரவியதால் தஞ்சம் அடைந்தவர்களும், மசூதியில் தொழுகையில் ஈடுபட்டவர்களும் காயமடைந்தனா.

[இ-3]

## லெபனான் - இஸ்ரேல் எல்லையில் நெருக்கடி

பேரூட், மார்ச் 16

லெபனானுக்கும், இஸ்ரேலுக்கும் இடையில் எந்த நேரத்திலும் யுத்தம் மூளும் நிலை ஏற்பட்டிருப்பதாக வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

இஸ்ரேலின் விமானம் லெபனான் எல்லைக்குள் பறந்து வேவு பார்த்ததையடுத்து, யுத்தத்துக்குத் தயாரான நிலையில் படைகள் வைக்கப்பட்டுள்ளன என்று லெபனான் அறிவித்துள்ளது.

லெபனான் எல்லையில் யுத்த டாங்கிகள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

ஹிஸ்புல்லா படையினரும் தயார் நிலையில் உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் தாக்குதலை ஆரம்பிக்கும் பட்சத்தில் லெபனான் பதிலடி கொடுக்கும் என லெபனான் பிரதமர் அறிவித்துள்ளார்.

(இ-3)

## வீடு கட்டிச் சாதனை

ஆக்லாந்து, மார்ச் 16

4 மணி நேரத்துக்குள் ஒரு முழு வீடு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாதனை நியூசிலாந்தில் உள்ள தெற்கு ஆக்லாந்தில் நிகழ்த்தப்பட்டுள்ளது.

கிறிஸ்தவர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் இந்த வீடுகட்டப்பட்டுள்ளது.

100 கட்டடக் கலைஞர்கள் மற்றும் பெயிண்டர்கள் அடங்கிய குழுவினரால் 3 மணிநேரம் 44 நிமிடம் 59 வினாடிகளில் இந்த வீடுகட்டி முடிக்கப்பட்டது. (க-10)

## மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கை ஆணைக்குழு தலைவருக்கு

கொழும்பு, மார்ச் 16

யாழ். மாவட்டத்தில் நிலவும் மனித உரிமை மீறல்கள், அத்துமீறல்கள் தொடர்பான விவரமான அறிக்கை ஒன்று தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் ஓ. எஸ். எம். செனவிரத்தினாவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண அலுவலகத்தில் பணியாற்றி கொழும்பு அலுவலகத்துக்குச் சென்றுள்ள அதிகாரியான எஸ், சிறீதரனே இந்த அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்.

குடாநாட்டில் படையினரால் கைதாகும் பொதுமக்கள் நிலைதொடர்பாகவும்—

தமிழ்க்கட்சிகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் — அந்த அறிக்கையில் விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் பிரதி ஒன்று மனித உரிமைக்குழு ணையாளர் ரி. சுந்தரலிங்கத்திடமும் வழங்கப்பட்டுள்ளது.

(இ-3)

## படகுச்சேவை இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஊர்காவற்றுறைக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் சேவையில்ஈடுபடும் 'குமுதினி' படகுச்சேவை கடந்த 13 ஆம் திகதி முதல் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் படகு திருத்த வேலைக்குச் சென்றுள்ளதால் இந்த சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## புதியகட்டடம்

மூளாய். மார்ச் 16

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் அண்மையில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

(க-99)

## கைதான குடும்பஸ்தர் சுழிபுரம் ராணுவ முகாமில்

யாழ்ப்பாணம், மார்ச் 16

பண்ணாகம்தெற்கில் படையினரால் கைது செய்யப்பட்டு தகவல் தெரியாதிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சுழிபுரம் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று படையினரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 20 ஆம் திகதி மேற்படி பகுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட நமசிவாயம் கணேசலிங்கம் என்பவரின் நிலை தொடர்பாக அவரது மனைவியினால்மனித உரிமைகள் ஆணைக் குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து படை வட்டாரங்களுடன் மேற்படி குழுவின் அதிகாரிகள் தொடர்பு கொண்டனர். அப்பொழுதே அவர் குறிப்பிட்ட முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

[இ-5]

## கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16

காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

கும்பாபிஷேகக் கிரியைகள் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்தக் கும்பிபாஷேகத்தை காணச் செல்ல விரும்பும் பக்தர்கள் தமது அடையாள அட்டை இலக்கம் மற்றும் விவரங்களைப் பெரிய கடையில் உள்ள. மகாராணி ரெக்ஸ்ரைல்ஸில் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Vespa Scooter (150CC) ஒன்று (Kubota) (K. S - 200) நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. பால சுப்பிரமணியம் (பாலா மாஸ்ரர்), ராசவீதி, இருபாலை.

(63873)

## தவறிவிட்டது

இராசையா திரவியநாதன் என்பவருடைய தேசிய, விஷேட அடையாள அட்டைகள் இரண்டும், (இல. 582853169V) மீசாலைக்கும், வரணிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து A.R. இரத்தினம், வைரவர் கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(63885)

தவசிகுளம், கொடிகாமம் என முகவரி இடப்பட்ட கந்தையா செல்வகுமார் என்பவருடைய விசேட அடையாளஅட்டை இல. 091024303 யாழ். பஸ் நிலையப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க. செல்வகுமார், கண்ணகை அம்மன் கோயில், தவசிகுளம், கொடிகாமம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(63889)

செல்வநாயகம் அன்னலட்சுமி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை [478292066X], விசேட அடையாள அட்டை, தீவகம் செல்லும் அனுமதி அட்டை என்பன ஆஸ்பத்திரி வீதிக்கும் வேம்படி பாடசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வேணி களஞ்சியத்தில் (கே. கே எஸ் வீதி) ஒப்படைக்கவும்.

(63878)

ஆனைக்கோட்டை மானிப்பாய்வீதியைச் சேர்ந்த செல்வி அம்பிகை பூபாலன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல. 503648055V). விசேட அடையாள அட்டை என்பன தட்டாதெருச் சந்திக்கும் சிவன்கோயிலடிக்கும் இடையில் மினிபஸ் பயணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்

(63883)

## கோழிக் குஞ்சுகள்

2 கிழமை நிரம்பிய கலப்பின கோழிக குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 16, றக்கா லேன், சுண்டுக்குளி

(சி/6787)

## திருமணசேவை

எங்களிடம் எல்லா மதத்தினருக்கும் மணமக்கள் உண்டு. ஞாயிற்றுக் கிழமைகளில் பொருத்தங்கள் பார்த்துக் கொடுக்கப்படும். மற்றும் ஏனைய நாள்களில் வழமைபோல் தொடர்பு கொள்ளலாம். பழைய தொடர்பு உள்ளவர்களும் நேரில் வந்து சந்திக்கலாம். துர்க்கா திருமண சேவை. 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[63890]

## யாழ்ப்பாணம்

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி யாழ். சேவையில் ஒலிபரப்பப்பட்ட சரிநிகர் சமானம் நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடக நூல் யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா 50.

(63892)

## மணமகன் தேவை

விஸ்வகுல 41 வயதுடைய ஓர் அளவு படித்த அழகான கிரகபாவ குற்றம் இல்லாத பெண்ணுக்கு விஸ்வகுல மணமகன் தேவை. ஜாதக விவரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 855, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (63848)

# அனைத்துக் கல்வி வளங்களும் யாழ். மாணவர்களுக்கும் வேண்டும்

## கணனி கையளிப்பு வைபவத்தில் உரை

நல்லூர், மார்ச், 16

நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் அனைத்து கல்வி வளங்களும் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும். யுத்தத்தைக் காரணமாகக் கொண்டு எமது மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதை ஏற்க முடியாது.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான கணனி கையளிப்பு வைபவத்தில் பேசிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் க. இராசதுரை தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது வைபவத்தில் சிவதாசன் மேலும் கூறியதாவது.

கல்வியை முதலீடாகக் கொண்டு உயர்ந்த ஸ்தானத்தை வகித்த யாழ்ப்பாணம் இன்றைய சூழல்களால் மிகவும் பின்தள்ளப்பட்டுள்ளது.

செய்திகளும் தரவுகளும் உலகத்துடன் மிகவும் நெருங்கிவிட்ட நிலையில் எமது மாணவர்களுக்கு விஞ்ஞான, ஆங்கில, தொழில் நுட்ப அறிவுகளுடன் கணனி பற்றிய பயிற்சியும் மிகவும் அவசியம். 2 ஆம் நூற்றாண்டு கணனி மயப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

மாணவர்களுக்கு கணனித்துறையில் சிறந்த அறிவை வழங்கக்கூடியதாக ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படும். ஒவ்வொரு வலயத்திலும் ஒரு பயிற்சி நிலையம் நிறுவ நிதி ஒதுக்கப்படும்.

கடந்த தடவை வழங்கப்பட்ட கணனிகள் உரிய முறையில் கையாளப்படவில்லை. இம்முறை அவற்றை உரிய முறையில் பயன்படுத்தத் தவறும் பாடசாலையில் இருந்து அவற்றை மீளப்பெற்று பயன்படுத்தக் கூடிய பாடசாலைக்கு வழங்க கல்விப் பணிப்பாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார்:

### அரச அதிபர் உரை

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தமது உரையில் கூறியதாவது: பல்வேறு துறைகளிலும் மாணவர்கள் வளர்ச்சி காண்பதில் தான் நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

இந்த அடிப்படையில் சில அத்தியாவசியத் திட்டங்களை உருவாக்கி அவற்றை நடைமுறைப் படுத்துவதில் நாம் இப்போது அக்கறை கொண்டுள்ளோம். போர்ச் சூழல்களால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்று ஐம்பது சதவீதமான மாணவர்கள் தான் கல்வியில் கவனம் செலுத்துகின்றனர். பாடசாலைகள் சேதமுற்றும் இடம் மாறியும் இருப்பதே இதற்குக் காரணம்.

எமது மாணவர்களின் அறிவு விருத்திக்கு நம்மால் முடிந்த பணிகளைச் செய்ய வேண்டும் அவர்களுக்கு நாங்கள் உதவ வேண்டும். கல்வி வளர்ச்சிக்கான ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டால் அதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றார்.

### அதிபர் உரை

கல்லூரி அதிபர் இராசதுரை தமது தலைமையுரையில், இங்கே உள்ள இளைஞர்கள், யுவதிகளுக்கு கணனிப் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும் என்பதில் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டமையே இன்று இந்த வைபவம் நிகழக்காரணம் ஆகியது.

பொதுவாக ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி வசதிகள் எமது மாணவர்களுக்குக் குறிப்பாக வவுனியா தவிர்ந்த எமது பகுதி மாணவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. பிரதானமாக கணனிக் கல்வி புறக்கணிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் எமது கல்லூரி பழைய மாணவர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த முயற்சியால் கணனிக் கல்வி கிடைக்கப் பெற்றுள்ளது. அரசாங்க அதிபரும் டக்ளஸ் தேவானந்தாவும் யாழ்ப்பாண கல்விச் சமூகத்தால் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்றார்.

### வலயக் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணவலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை கூறியதாவது: உலகத்தை இணைக்கும் சாதனமாக கணனியும் ஆங்கிலமும் இருப்பதால் இவற்றில் நாம் முக்கிய கவனம் செலுத்தல் வேண்டும். முன்னைய செயற்பாட்டில் கணனி புகுந்த போதும் எமது மாணவர்களுக்கு அது பற்றித் தெரிந்திருக்கவில்லை. இன்று அவை எமக்குக் கிடைத்துள்ளது.

ஆசிரியர்கள் கணனி பற்றிய தெளிவான அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். பாடசாலை நிர்வாகத்தை சிறப்பாகக் கொண்டு நடத்தவும் எந்தத் தரவுகளையும் உடனுக்குடன் கல்வி அமைச்சுக்கு வழங்கக்கூடிய திறமையை ஆசிரியர்கள் பெறவேண்டும் என்றார்.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோரிடம் கணனிப் பொறிகளை சிவதாசன் எம்.பியும் அரசாங்க அதிபர் சண்முகநாதன் மற்றும் ஈ. பி. டி. பி கட்சியின் முக்கியஸ்தர்கள் ஆகியோரும் வழங்கினார்கள்.

47 கணனிப் பொறிகள் ஐந்து வலயங்களிலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன. (இ-103)

# நவாலியில் சிறுபோக நெற்செய்கை

நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்தி நவாலி களையோடைப் பகுதியில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

நவாலி விவசாயிகள் சம்மேளனத்தில் பதிவு செய்த சி. மூர்த்தம்பி (சம்பர்) என்ற விவசாயியே குளத்து நீரைப் பயன்படுத்தி சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றார்.

நவாலி விவசாயிகள் சம்மேளனம் இவரின் முயற்சிக்கு ஊக்கமளித்தும் வருகின்றது. (இ-185)

# 2 ஆயிரம் ஹெக்ரேயரில் சிறு தானியம்

வலி. தென்மேற்கு, மார்ச் 16

வலிகாமத்தில் இந்த வருடம் 2 ஆயிரம் ஹெக்ரேயரில் சிறுதானியம் பயிரிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அறுவடை முடிந்த இடங்களிலும், அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்தும் எள், பயறு, சணல் மற்றும் தானிய வகைகளை விவசாயிகள் விதைத்து வருகின்றனர்.

இதேவேளை சிறுதானியம் பயிரிடப்படாது தரவையாக விடப்படும் காணிகளின் விவரம் சம்மேளனங்களினால் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

(இ-185)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## இராமகிருஷ்ணன் நாகராசா பத்தர்

தோற்றம் 1949 - 06 - 01 | மறைவு 1999 - 03 - 01

அன்புத் தெய்வமே அப்பா!
சிறு சுகயீனத்தால் நான்கு நாள் மருத்துவமனையில்
இருந்து மறைந்தாயே ஐயா!
இனி ஒளி வீசிய உங்கள்
முகத்தை எப்போது பார்ப்போமையா?
உம் ஆத்மா சாந்தியடையக்
காளியம்மனை வேண்டுகின்றோம் ஐயா!

அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெறும் வீட்டுப் பூசையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். எமது தந்தையின் மறைவை ஒட்டி சகல வழியிலும் உதவி செய்து பிரசுரங்கள் வழங்கிய யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்திற்கும், உறவினர்களுக்கும், நண்பர்கள், அயலவர் மற்றும் KKV. நகைமாளிகையினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தாய், மனைவி,**
**பிள்ளைகள், சகோதரர்கள்.**

88/5 C, கேசாவில் வீதி,
யாழ். வண்ணார்பண்ணை. (63876)

---

யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் சுவட்டு மைதானப் போட்டி 1999

இடம்: கல்லூரி மைதானம்.
காலம்: **17 - 03 - 1999** புதன் பி.ப.1: 30 மணி
தலைவர்: திரு. சு. புண்ணியசீலன் (அதிபர்)
பிரதம விருந்தினர்: உயர்திரு. க. கந்தசாமி
(மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
வடக்கு கிழக்கு மாகாணம்.)
சிறப்பு விருந்தினர்: திரு. வி. இராசையா
(கல்விப் பணிப்பாளர், வலிகாமம், வலயம்.)
கௌரவ விருந்தினர்: துர்க்காதுரந்தரி
கலாநிதி செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி.

★ தங்களை அன்புடன் அழைக்கின்றோம். ★

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை. (63894)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழு விசாரணை செயலகத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று முன்தினம் காலை தனது விசாரணைகளை யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்தது.

சட்டத்தரணி மனோரிசரத் முத்தெட்டுவேகம ஒய்வு பெற்ற சிறைச்சாலை ஆணையாளர் கே. ஜி. தர்மதாச ஒய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பொ. பாலவடிவேல் ஆணைக்குழுவின் செயலாளர் ஏ. ஸி. இக்பால் ஆகியோர் அடங்கிய 14 பேர் கொண்ட குழு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது தெரிந்ததே.

ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆணைக்குழுவின் முதல்நாள் விசாரணைகளில் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

காணாமல் போனோர் தொடர்பான 144 முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் நேற்று முதல் ஆணைக் குழுவால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழு 1988 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து 1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் காணாமல் போனவர்களில் ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவால் விசாரிக்கப்படாதவர்கள் தொடர்பான முறைப்பாடுகளையே விசாரணை செய்யும் என்று ஆணைக்குழுத் தலைவர் மனோரி சரத் முத்தெட்டுவேகம செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

இந்தக் காலப்பகுதியில் காணாமல் போனோர் தொடர்பாக நாடு முழுவதிலும் இருந்து எமக்கு 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

காணாமற் போனோர் தொடர்பான விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட முன்னைய ஆணைக் குழுக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து விசாரணை செய்யக் கூடிய சூழ்நிலை இல்லாமல் இருந்தமையால் அவர்கள் இங்கு வந்து விசாரணைகளை மேற்கொள்ளவில்லை.

தற்போது எமக்குப் பல முறைப்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் இருந்து கிடைத்துள்ளன. எனினும் முறைப்பாடு கொடுத்தவர்கள் அல்லது காணாமற் போனவர்களின் உறவினர்களில் பலர் பல்வேறு காரணங்களால் யாழ். மாவட்டத்தில் இருந்து வெளியேறி வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களுடன் நாம் தொடர்பு கொள்ள வேண்டி இருந்தது. அதற்காக நாம் தமிழ்ப் பத்திரிகைகள் மற்றும் வானொலி ஆகியன மூலம் இது தொடர்பாக விளம்பரப்படுத்தினோம்.

அதன் விளைவாக அவர்களில் சிலரின் தற்போதைய முகவரிகள் கிடைத்துள்ளன. அதனை அடுத்து நாம் அவர்களுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் தொடர்பு கொண்டு விசாரணைகளுக்கு அவர்களை அழைத்திருந்தோம்.

எமக்கு 344 முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதும் 144 முறைப்பாடுகள் தொடர்பாகவே அவர்களது உறவினர்களின் தொடர்புகள் எமக்குக் கிடைத்துள்ளன.

ஏனைய முறைப்பாடுகள் தொடர்பாக அவர்களின் உறவினர்கள் எம்முடன் தொடர்பு கொண்டால் நாம் அவர்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று விசாரணை செய்வதற்குத் தயாராகவுள்ளோம். எனினும் நாம் செல்ல முடியாத இடங்களுக்கு அதாவது கிளிநொச்சி போன்ற இடங்களுக்கு செல்லமுடியாது; கொழும்பு, வவுனியா, அனுராதபுரம் போன்ற மாவட்டங்களுக்கும் சென்று நாம் விசாரணைகளை நடத்த முடியும். இப்படி அவர் கூறினார். (இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்லாலை பஸ் சேவை; ஆரம்பிக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், மார்ச் 16

சில்லாலைப் பகுதியிலுள்ள மக்களின் நலன் கருதி யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து சில்லாலைக்கான 191 இலக்க பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு வடபிராந்தியப் போக்குவரத்து ச்சபையிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தற்போது சில்லாலைப் பகுதி மக்கள் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து பண்டத்தரிப்புச் சந்திக்கு வந்து தங்கள் பிரயாணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆகவே முன்னர் நடைபெற்று வந்த மேற்படி 191 இலக்க பஸ் சேவையை மீண்டும் ஆரம்பித்து உதவுமாறு இந்தப்பகுதி மக்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபைப் பொது முகாமையாளருக்கு அண்மையில் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

[இ-135)

## யாழ். பல்கலைக்கழக

# தமிழ் மன்றம் நடத்தும் சிறுகதைப் பயில்களம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றம் ஒழுங்கு செய்துள்ள ''சிறுகதைப் பயில்களம்'' என்னும் விசேட நிகழ்வு ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் மன்றத்தலைவர் சு. குணேஸ்வரன் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழகக்கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா ''தமிழ்ச் சிறுகதைகள் ஒரு வரலாற்று நோக்கு'' என்ற தலைப்பிலும் —

கலைப்பீடாதிபதி அ. சண்முகதாஸ் ''சிறுகதை—உருவமும் உள்ளடக்கமும்'' என்ற தலைப்பிலும்—

தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் நா. சுப்பிரமணியம் 'ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள்— ஒரு விமர்சன நோக்கு' என்ற தலைப்பிலும்—

பல்கலைக்கழகப் பதிவாளர் கலாநிதி க. குணராசா 'சிறுகதைகள் படைப்பாளி நோக்கில்' என்ற தலைப்பிலும்— கருத்துரை வழங்குவர்.

பிற்பகல் 2 45 மணியளவில் கலந்துரையாடல் ஒன்றும் அதனைத் தொடர்ந்து சிறப்பு நிலைக் குறிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

சிறுகதையில் ஆர்வம் உள்ளவர்கள் மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## நாடாளுமன்றத்தின்

# கழிவுநீர் வாய்க்காலில் கர்ப்பத்தடை உறைகள்!

கொழும்பு, மார்ச் 16

நாடாளுமன்றத்தின் முன்பக்கத்தில் உள்ள கழிவுநீர் செல்லும் வாய்க்காலில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாவித்த கர்ப்பத்தடை உறைகள் எடுக்கப்பட்டன எனக் கூறப்பட்டது.

நாடாளுமன்றத்தில் உள்ள கழிவு நீர் வெளியே செல்வதற்கு அமைக்கப்பட்டிருந்த வடிகாலில் அடைப்பு ஏற்பட்டது என்றும்—

நாடாளுமன்றத்தில் பணிபுரியும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் அந்த வடிகாலைச் சுத்தம் செய்தனர் என்றும்—

அப்பொழுது அங்கிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாவித்த கர்ப்பத்தடை உறைகள் எடுக்கப்பட்டன என்றும்— தெரிவிக்கப்பட்டது.

கழிவு நீர் செல்லும் வடிகாலில் பெரும் தொகையில் கர்ப்பத்தடை உறைகள் சென்றமையே அந்த வடிகால் அடைபடக் காரணம் எனக் கூறப்பட்டது. (இ-3)

# கஹவத்தையில் கலவரம்; 4 பொலீஸார் காயம்

கொழும்பு. மார்ச் 16

மலையகத்தில் கஹவத்தைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றை அடுத்து ஏற்பட்ட பதற்ற நிலையைத் தணிக்க பொலீஸாரும், இராணுவத்தினரும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கஹவத்தப்பகுதியில் சட்ட விரோதமாக இரத்தினக்கல் தோண்டிய குழு ஒன்றுக்கும், பொலீஸாருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பு ஒன்றில் ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர்.

அதையடுத்து அங்கு பதற்ற நிலை தோன்றியது.

அங்கு ஏற்பட விருந்த இனக்கலவரத்தை முறியடிக்கும் வகையில் இராணுவத்தினரும், பொலீஸாரும கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர்.

அங்கு இடம்பெற்ற மோதல்களில் 4 பொலீஸார் சூட்டுக்காயங்களுக்கு உள்ளாகினர்.

பதற்றம் தணிந்துவருவதாகவும்—

பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது என்றும்— கூறப்பட்டது. (இ-3)

## வாசகர் திருமுகம்

# இடத்தைப் பெற முயற்சிக்கலாமே!

10 - 3 - 99 அன்று வெளியான ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபரின் கடிதம் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதே. ஆனாலும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் சந்தேகங்கள் சிலவற்றுக்கும் அதிபர் பதில் தருவார் என நம்புகின்றோம்.

2000 ஆண்டோடு இலங்கை முழுவதும் உள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் யாவும் மூடப்படும் எனப் பொதுவாக ஒரு செய்தி உள்ளது. செய்தித் தொடர்பு சாதனங்களிலும் இச்செய்தி வெளியானது. 2000 ஆண்டோடு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் மூடப்படின் கலாசாலை அனுமதி மறுக்கப்பட்டது நியாயமில்லை அல்லவா?

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஏறத்தாழப் பன்னிரண்டு ஆண்டுகளாக இடம்பெயர்ந்தே இயங்குகின்றது. அது தன் சொந்த இடத்திற்கு செல்லும் சந்தர்ப்பம் மிக அரிது; ஏன். இல்லை என்றே கூறலாம். இந்நிலையில் அது தனக்குரிய வசதிகள் வாய்ப்புகளை இது வரை காலத்தில் தேடியிருக்கலாமே? உயர் தொழில் நுட்பக் கல்லூரி முயற்சி செய்து தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுக் கொள்ள முயலவில்லையா? அதற்கு இடமும் கிடைத்து விட்டதே.

தொடர்ந்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் இயங்க வாய்ப்பு உண்டு எனின் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை தனக்கென வசதிகளைத் தேடிக் கொள்ள வேண்டியது அவசியம். இல்லையெனின் தொடரும் காலங்களிலும் பல ஆசிரியர் பாதிப்படைய நேரிடலாம்.

கரவெட்டி.

திருமதி அ. சிவகுமாரன்.

# விளம்பரத்தின் நோக்கம் என்ன?

ஆசிரியர் கலாசாலைகளில் விரிவுரையாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் பற்றிய 9-3-99 உதயன் பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்து அதிர்ச்சியும் ஆற்றொணா வேதனையும் அடைந்தவர்களில் நானும் ஒருவன். ஏனென்றால் வெற்றிடமுள்ளதாக விளம்பரப்படுத்தப் பட்டிருந்த பலாலி ஆசிரிய கலாசாலையில் வி வுரையாளருக்கான வெற்றிடங்கள் கடந்த வாரமே நிரப்பப்பட்டு விட்டன. வலயக் கல்விப்பணிப்பாளரது நியமனக் கடிதம் பெற்ற அறுவர் இதுவரை பதவியை ஏற்றுக்கொண்டமை ஒன்றும் பரம இரகசியமானதல்ல. அப்படி இருக்க வெற்றிடம் உள்ளதாகவும் குறித்த திகதியின் முன் விண்ணப்பம் அனுப்பும்படியும் கோருவதன் மர்மம் என்ன? நேர்முகப் பரீட்சை மூலமே தகுதியானவர்களைத் தெரிவு செய்தோம் என எல்லோருக்கும் காதில் பூவைக்கவா? வலய, மாகாண மட்ட அதிகாரிகளும் இந்த ஏமாற்று வித்தைக்கு உடந்தையா? அறியத் துடிக்கிறார்கள் அப்பாவி ஆசிரியர்கள். ஓர் உயர் கல்வி நிறுவனத்துக்கு விண்ணப்பிக்க அடிப்படைத் தகுதி தேவையில்லையா? ஆகக் குறைந்தது குறித்த பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சிறப்புப் பட்டத்துடன் பட்டப்பின்படிப்பில் திறமை அல்லது விசேட சித்தியும் மேலதிகமாக முதுகலைமாணிப் பட்டமும் கோருதல். தகுதியானோர் மட்டும் விண்ணப்பிக்க வழி செய்யாதா? இத் தகுதி கொண்டோர் யாழ்ப்பாணத்தில் இல்லையா? அப்பாவி ஆசிரியர்கள் பலர் விண்ணப்பிக்க அலைவதையும், வீண் ஏமாற்றத்தையும் தவிர்க்க முடியாதா? இப்போது நியமனம் பெற்றவர்கள் சேவை மூப்போ, மேற் குறித்த தகுதிகளோ இல்லாதவர்களாக இருப்பதுதான் இவ்வாறு கோரப்படாமைக்குக் காரணமோ? ஆசிரியர்களை உருவாக்கும் இடத்திலேயே இக்கலாசாரம் தொடர்ந்தால் எமது மூகத்தைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது.

யே. அன்ரன் இராசநாயகம்

ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

# ஏன் இந்தப் பாகுபாடு?

அரசாங்கப் பாடசாலைகள் என்றுகூறிக் கொண்டு பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு இடர்க்காலக் கொடுப்பனவு என்று கூறிக்கொண்டு 1997 ஆம் ஆண்டுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு விட்டன. 1998 ஆம் ஆண்டுககுரிய இடர்க்கால கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு முன்பும் 1990 ம்ஆண்டும் இப்படியான கொடுப்பனவுகள் நடைபெற்றன. இது மட்டுமா? 1999 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் இந்த இடர்க்கால கொடுப்பனவுகள் மாதாமாதம் சம்பளத்துடன் வழங்கப்பட இருக்கின்றன.

குடாநாட்டில் நான்கு கல்லூரிகள் மட்டும் தனியார் பாடசாலைகளாகக்கணிக்கப்படுகின்றன. பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர்கல்லூரி, சம்பத்திரிசியார் கல்லூரி. யாழ்ப்பாணக்கல்லூரி ஆகியவையே அவை. இந்தக்கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கு வேதனங்களும், இளைப்பாற்றும் சம்பளங்களும் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது. இந்தக்கல்லூரிகளின் மேற்பார்வை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. இங்கு கல்விகற்கும் பிள்ளைகளுக்கு சீருடைகளும் புத்தகங்களும் அரசாங்கமே இலவசமாக வழங்குகின்றது.

இந்த நான்கு கல்லூரிகளிலும் ஏறத்தாழ 350 ஆசிரியர்களே கல்வி கற்பிக்கின்றார்கள் ஆனால் அவர்களுக்கு இந்த இடர்க்காலக்கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை. இவர்களின் உயிர்களுக்கு ஆபத்து இல்லையா? ஏன் இந்தப்பாகுபாடு? சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுப்பீர்களா?.

நா. வல்லிபுரம்.

அரியாலை.

# 10,000 மீனவர் குடும்பங்கள் மன்னார்ப் பகுதியில் பாதிப்பு

## மீன்பிடிக் கட்டுப்பாடு காரணம்

மன்னார், மார்ச் 16

மன்னார் கடற்பரப்பில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு கராணமாக 10 ஆயிரம் மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

அன்றாடம் உழைத்து வாழ்ந்து வந்த மீனவ குடும்பங்கள் இந்தத் தடை காரணமாக வருமானம் ஏதுமின்றி கஷ்ட நிலையில் உள்ளன என்றும்—

அவர்களுக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இங்கு விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக மீன் விலை உயர்ந்துள்ளதுடன் கொழும்புக்கு மீன் அனுப்புவதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-3)

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 26 |
| 12 | 03 |
| 1973 | 1998 |

செல்வன்

### கணேசன் முகுந்தன்

திதி: 17 — 03 — 1999

" எம் உயிரே குலக்கொழுந்தே
சுடுகின்ற வெங்கனலில் துடிக்க விட்டு
திடுமென்று விண்ணுலகு சென்றதேனோ? "
" பங்கமின்றிக் கண்ணன் கழல் போற்றிய நீ
தங்காமல் சடுதியிலே சென்றாலும் அவன்
கழற் கீழ் நீங்காமல் உறங்கிடுவாய் நெடிது "

சாவகச்சேரி சப்பைச்சி மாவடி ஸ்ரீ சக்கர ஆழ்வார் ஆலயத்தில் 17 — 03 — 99 புதனகிழமை பகல் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அன்னதானத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மீசாலை. குடும்பத்தினர்

[63871]

## ச. ச. நிலைய புனரமைப்பு பூர்த்தி

வேலணை, மார்ச் 16

வேலணைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட திருவள்ளுவர், செட்டிபுலம், புனித பிலிப்ஸ் ஆகிய சன சமூக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இம் மூன்று சனசமூக நிலையங்களின் புனரமைப்புக்கென வேலணைப் பிரதேச சபையினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து சுமார் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஐ-167)

## அறநெறிப் பாடசாலை

யாழ்ப்பாணம், மார்ச் 16

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை இடம் பெற்றுவரும் கூட்டுப் பிரார்த்தனையோடு அறநெறிப் பாடசாலையையும் இந்த மாத இறுதிக் கிழமை முதல் ஆரம்பிப்பதற்கு சரசாலை இந்துமன்றம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தரம் ஒன்று முதல் 9 வரையுள்ள மாணவர்கள் மேற்படி வகுப்பில் கலந்து கொள்ளலாம் என மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

(ஐ)

## கருகிய நிலையில் பெண்ணின் சடலம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

உடல் முழுவதும் எரிந்து கருகிய நிலையில் ஒரு பெண்ணின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் புது வீதிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கந்தசாமி சந்தான லட்சுமி (வயது 59) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டும் மரண விசாரணையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

(இ-17-15)

சுழிபுரம் அருள்மிகு,
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
ஆலய வருடாந்தப் பொங்கல் விழா

விளக்கு வைத்தல் 16 - 03 - 1999 செவ்வாய்க்கிழமை.
முதலாம் பொங்கல் 23 - 03 - 1999 செவ்வாய்க்கிழமை.
இரண்டாம் பொங்கல் 30 - 03 - 1999 செவ்வாய்க்கிழமை.


வழமைபோல் நடைபெறும்.

அடியார்கள் ஊரடங்கு நேரத்தைத் தவிர்த்து பொங்கல் நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

17 - 03 - 99 தொடக்கம் 22 - 03 - 99 வரை. மாலை 4. 30 மணியளவில் சமயச் சொற்பொழிவு நடைபெறும்.

தேவஸ்தான பரிபாலன சபை,
ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
சுழிபுரம்.
(63879)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### கார்த்திகேசு யோகநாதன்

[ முன்னாள் ஈழநாடு பத்திரிகை ஆசிரியரும், சமாதான நீதிவானும் ]

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 28 - 11 - 1935 | 14 - 02 - 1999 |

அன்பான எம் திரு உருவே, நீர் எமை எல்லாம் துன்பத்தில் தவிக்கவிட்டு தொலை தூரம் சென்ற மாயந்தான் என்னவோ?

எமது குடும்பத் தலைவர் சுகவீனமுற்று இருந்த வேளை அவருக்கு வைத்திய உதவி புரிந்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார். ஊழியர்களுக்கும் எமது குடும்பத்தலைவரின் மறைவு கேட்டு பல வழிகளிலும் உதவி செய்து துயரில் பங்கு கொண்ட சகலருக்கும், கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரித்த வவுனியா C. B. I கல்வி நிறுவனத்தினர், வவுனியா M S. C கல்வி நிறுவனத்தினர், கொக்குவில் இந்துக் கல்லூரி குழாத்தினர் ஆகியோருக்கும் இரங்கலுரை ஆற்றியவர்களுக்கும் அஞ்சலிக் கூட்டம் ஒழுங்கு செய்து நடத்திய 'Jaffna Press Club' இற்கும் இது போன்று பல வழிகளிலும் உதவித் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று [ 16 — 03 — 1999 ] செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

5, அத்தியடி புதிய வீதி,
யாழ்ப்பாணம்.

(63891)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் கந்தர் இராசையா

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05-03-1924 | 14-02-1999 |

சீயென்று வெறுக்காத பாண்மை
சிறியோர்க்கும் பெரியோர்க்கும் ஒன்றாய்
சேவை செய்யும் இதயப் பேரான்
விட்டுப் பிரிந்தார் சிவராத்திரி நன்னாளில்
எங்களன்புத் தெய்வத்தின் நினைவில் என்றும்...

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு அவரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் இன்றும் சகல வழிகளிலும் முன்னின்று உதவி ஒத்தாசை புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று நடைபெறும் வீட்டுக் கிருத்திய கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

வங்களா வீதி,
மீசாலை மேற்கு.

(63831)

பாலர் ஆசிரியராகப்
பயிற்சி

தகைமை
க. பொ. த.
சாதாரண தரம்
அல்லது மேல்
தபாலில் ஆறுமாதங்களில்
பயிலலாம்.

பாலர் ஆசிரியர் சங்கம்
கோக்குவில்.
(63780)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## காலத்தின் தேவையே!

நீதிமன்றங்களினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்படுவோருக்கு அந்தத் தண்டனையை வழங்குவது என்று முடிவு செய்திருக்கிறது அரசு.

இப்போது, சட்டப் பிரகாரம் குற்றவாளிகளுக்கு நீதிமன்றங்கள் மரண தண்டனை விதித்த போதிலும் அது நிறைவேற்றப்படுவதில்லை. ஜனாதிபதி தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மரண தண்டனையை ஆயுள் காலச் சிறைத்தண்டனையாக மாற்றுவதும், மத தினங்களை முன்னிட்டு கைதிகளை விடுதலை செய்வதும் இப்போதைய நடைமுறை.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவது நிறுத்தப்பட்டிருந்தது. அந்த நடைமுறையை மாற்றி, மரண தண்டனையை நிறைவேற்ற இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. மரண தண்டனையை நிறைவேற்றுவதன் மூலம் குற்றச் செயல்கள் குறைய வழிபிறக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது; நம்புகிறது.

கருணை காட்டும் சமய, மற்றும் மனித நெறிக்கு மரண தண்டனை முரணானதா இல்லையா என்பது வேறு விடயம். நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரிக்கின்றன; சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களே நாட்டில் நடைபெறும் குற்றச் செயல்கள் மற்றும் வன்முறைகளில் மீண்டும் ஈடுபடுகிறார்கள் என்பதனைக் கண்டுபிடிக்க அரசாங்கத்துக்கு இருபது வருடங்களுக்கு மேலான காலம் தேவைப்பட்டிருக்கிறது.

வடமேல்மாகாண சபைக்கான தேர்தல் காலத்தில் நடைபெற்ற வன்செயல்கள் இந்த நாடு எங்கே சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு நல்லதோர் உதாரணம். ஆளுந்தரப்பினராலேயே தமது ஆதரவாளர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை என்பதனை அறிந்தே— உணர்ந்துதான்— இத்தகைய முடிவுக்கு அரசு வந்திருக்க வேண்டும்.

சாம, பேத, தான, தண்டம் என்ற படிமுறை முன்னோர் காலத்தில் வகுக்கப்பட்டது. அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டார்கள் என்ற வழக்கு மொழியும் உண்டு. சட்டம் உதவுவதை விட தண்டனையே அதிகளவில் உதவும். ஒரு முறை தண்டனையை அனுபவித்து உணர்ந்தவர், மீண்டும் அதனைச் செய்யக்கூடாது என்று திருந்துவதற்கு அது பெரிதும் உதவுகிறது. மற்றவர்களையும் குற்றஞ் செய்யாது இருக்கத் தூண்டுகிறது

தண்டனை ஒன்று உண்டு என நினைக்கும் போது குற்றஞ் செய்யப் பின்னிற்பது மனித இயல்பு. மரண தண்டனை நாட்டில் மலிந்துள்ள கொலைகளையும், பெரும் வன்முறைகளையும் குறைக்கப் பெரிதும் உதவும். கருணை காட்டுவதனைப் பலவீனமாக நினைக்கும் சமுதாயத்தை, நீதியினூடு தண்டிப்பதன் மூலமே திருத்த முடியும். அரசின் முடிவு காலத்தின் தேவையே.

# கப்பலுக்குக் காத்திருந்து ஏமாற்றமுற்றோரில்

# பலர் மனநோய் வரக்கூடிய குழப்ப நிலையில்

## உணவுக்கு வழியின்றித் தவிப்போர் மறுபுறம்

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்குக் கப்பல் சேவையினை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வட பகுதி மக்களின் துன்பங்கள், துயரங்களை யாரும் கணக்கிலெடுப்பதாகத் தெரியவில்லை. கப்பல் எப்போது ஓடும் என்ற பெரிய கேள்வியை மனங்களிலே சுமந்த படி நாளாந்தம் திருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்திலே வந்து கூடும் ஆயிரக்கணக்கான பயணிகளின் பரிதாப நிலையை வெறும் எழுத்துக்களில் மட்டும் வடித்து விட முடியாது. நேரில் கண்டால், கேட்டால் தான் புரியும்.

வயோதிபர்கள், குழந்தைகள், பெண்கள், பாலூட்டும் தாய்மார், கர்ப்பவதிகள், அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் என்று ஆயிரமாயிரம் பயணிகள், கப்பலை எதிர் பார்த்துக் காத்து நிற்கின்றனர். இந்தப் பயணிகளில் பலர் கடந்த வருடம் மார்கழி மாதம் தொடக்கம் கப்பலை எதிர் பார்த்து தவம் கிடக்கின்றனர்.

இந்தப் பயணிகளின் பரி

**செய்தி மடல்**

தாப நிலையை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் நன்கு உணர்ந்துள்ள போதிலும், அவரால் கூட கப்பல் எப்போது ஓடும் என்ற சரியான திகதியினைக்கூற முடியாத நிலையிலுள்ளார். கடன் காராருக்குத் தவணை சொல்லுவது போல பல தவணைகளைபயணிகளுக்கு சொல்லியும் கப்பல் குறிப்பிட்ட திகதிகளில் ஓடாமையால் பிரதேச செயலரும் செய்வதறியாத நிலையில் உள்ளார்.

நாளாந்தம் அவரது அலுவலகம் வந்து போகும் பயணிகள் தத்தமது குடும்ப நிலைமைகளை சக பயணிகளிடம் சொல்லி வேதனைப்படுவதை நேரிலே பார்க்கும் போது கல்லான இதயங்களும் இளகவே செய்யும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான தேவைகளுக்காக கொழும்புக்கு வந்தவர்களே, தாம் வந்த விடயங்களை செய்து முடித்துவிட்டு, திருமலைக்கு வந்தவர்கள் தான் இந்தவட பகுதிப் பயணிகள்

**நம்பமுடியாத நிலையில் ......**

கப்பல் எப்போது ஓடும் என்ற எதிர்பார்ப்பு, எல்லோர் மனங்களிலும் பெரும் ஏமாற்ற உணர்வை ஊட்டியுள்ளதால், யாரையும் நம்ப முடியாத நிலையிலேயே பயணிகள் உள்ளனர்.

கப்பலை எதிர்பார்த்து தவம் கிடக்கும் பயணிகள் மகிழ்ச்சியை எங்கோ தொலைத்து விட்டனர் என்ற உணர்வே உண்டாகிறது. எதையோ இழந்தவர்களாக, எதையோ பறி கொடுத்தவர்களாக, மனம் குழம்பியவர்களாக உள்ளனர்.

இம் மாதமும் கப்பல் ஓடாது விட்டால் இங்குள்ள பலருக்கு பைத்தியம் பிடிக்குமோ என்ற அச்ச நிலையும் உள்ளது!

இத்தகைய பரிதாப நிலையினை அரசின் உயர் அதிகாரிகள் வரை எடுத்துச் சொல்லியும் யாரும் உதவிக் கரம் நீட்ட முன் வரவில்லை. வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநரிடம் கடந்த வாரம் மகஜர்ஒன்று கையளிக்கப்பட்டது. ஆனால் எந்த விதமான நன்மைகளும் கிட்டவில்லை. மேலிடத்துக்குஉங்கள்கோரிக்கைகள் அனுப்பி வைக்கப்படும் என்ற பதிலே உயர் அதிகாரிகளின் வாயிலிருந்து வெளி வருகின்றது.

கப்பலும் ஓடாது கடலையும் தாண்ட முடியாது இங்குள்ளோர்களின் குடும்பங்கள் வடபகுதியில் படும் அவலங்கள் குறித்து கடித மூலம் அறியும் போது இங்குள்ளவர்கள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலத் துடிக்கிறார்கள்.

**ஒரு வேளையே சாப்பாடு**

இங்குள்ள பயணிகளில் பெரும்பான்மையானோர் ஒரு வேளைச் சாப்பாட்டுடனேயே நாள்களைக் கழிக்கின்றனர்; கஷ்டப்படுகின்றனர். இம் மாதமும் கப்பல் சேவைகள் நடைபெறாது விட்டால் இங்குள்ள பெரும்பாலான பயணிகளின் அன்றாடச் சாப்பாட்டுக்கு வழி தெரியாது தவிக்கக் கூடிய பரிதாபமும் தோன்றலாம்!

திருமலை ஐக்கிய பொதுச் சந்தையிலே தங்கியுள்ள பயணிகள் தமது நிலைமையினை திருமலை நகர சபைத் தலைவர் சூரியமூர்த்திக் எழுத்து மூலம் தெரிவித்து தமக்கு உணவுக்கு வழி செய்து தருமாறுகேட்டுள்ளன

கப்பலை எதிர் பார்த்துக், கொண்டு வந்த காசையும் செலவழித்து விட்டு, நாளைய செலவுக்கு என்ன கதி என்று ஏங்கிய வண்ணம் வீதிகளில் அலைந்து திரியும் பரிதாப நிலையையும் காணக் கூடியதாயுள்ளது;

இதேவேளை சர்வதே செஞ்சிலுவைச் சர்வதே குழுவும் வேறொரு யாரி தனியார் வர்த்தகரின் கப்பலும் பயணிகளைத் திருமலை

**ப. உதயகுமார்**
உதயன் செய்தியாளர்

யிலிருந்து ஏற்றிச் செல்லும் சேவையை மேற்கொள்ளத் தயார் நிலையில் உள்ள போதிலும், பாதுகாப்புப் பிரிவினர் அதற்கு அனுமதி வழங்காமையால் பயணிகள் சேவைக்கான மற்றொரு வாய்ப்பும் தடைப்பட்டுள்ளது.

வடபகுதிப் பயணிகள் என்ன பாவம் செய்தார்கள் என்பது யாருக்கும் தெரியாத விளைவாக, கப்பலை எதிர் பார்த்துக் காத்திருப்போரின் பரிதாபநிலை, அவல நிலை குடும்பங்களைப் பிரிந்து வாடுகின்ற நிலை, கல்வியைத் தொடர்ந்து மேற்கொள்ள வடபகுதி செல்ல முடியாத நிலை என்று மாறுமோ மாற்றுவது யாரோ? ★

# மாதாந்த நிதி உதவி வழங்குமாறு

# கடற்றொழிலாளர் சார்பில் கோரிக்கை

யாழ்ப்பாணம். மார்ச் 16

எமக்கு நிரந்தரமாக தொழில் செய்வதற்காவ அனுமதியைப் பெற்றுத் தர முடியாதவிடத்து நாட்டு நிலைமை சீராகும் வரை எமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு மாதாந்தம் நிதி உதவி வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் வடக்கு-கிழக்கு மாகாண கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பணியாளர் ச. சிறிஸ்கந்தராசாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் கடந்த வாரம் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

சமாசத் தலைவர் எஸ். தவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் மாகாணப் பாணிப்பாளர் கடற்றொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பாக வினவியபோது கடற்றொழிலாளர்கள் மேற் குறிப்பிட்ட கோரிக்கையை முன் வைத்தனர்.

கடற்கரையோரங்களில் கடமையாற்றும் படையினரால்கடற்றொழிலாளர்களின் தொழில் அனுமதி அட்டைகள் அடிக்கடி பறிக்கப்படுவதால் தொழிலைத் தொடர்ந்துசெய்ய முடியாத நிலைமை கடற்றொழிலாளருக்கு ஏற்படுகிறது—என்றும் கடல் வலயத்தடைச் சட்டம் மீன்பிடித் தூரம் மற்றும் நேரக் கட்டுப்பாட்டினால் கடற்றொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர் நோக்குவதாகவும் பணிப்பாளருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

வடமாகாண மீள்குடியேற்றப் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் செயற்றிட்டங்களில் கடற்றொழிலாளரின் பிரச்சினைகள்பற்றி ஆராய்வதற்கு இந்தத்துறயுடன் தொடர்புடைய எவருமில்லாததால் மேற்படி சபையின் திட்டங்களில் கடற்றொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றும் மாகாணப் பணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் ஏ. ஸி. செபநாயகமும் கலந்து கொண்டார்.

[இ-5-6]

**உதய வாக்கு**

நாங்கள் செய்யவேண்டியதை மன உறுதி இருக்கும்போதே செய்ய வேண்டும்.

- ஷேக்ஸ்பியர்

## தவக்காலச் சிந்தனை-28

எல்லா நாள்களும் இறைவன் படைத்த நாள்களே. எல்லாவற்றையும் படைத்த பின் இறைவன் யாவும் நல்லவை எனக்கண்டார். மனிதனானவன் குற்றங்காண்பதிலும், பிழை பிடிப்பதிலும் கண்டு பிடிப்பாளனாக இருக்கின்றான். மனிதனின் கண்களுக்கு நல்லவற்றை விட சரியானவற்றைவிட — தீமையானவையும், பிழையானவைகளுமே உடனே தெரிகின்றன. மற்றவர்களின் பிழைகளைச் சுட்டிக்காட்டுவதே பலருக்கு இன்பம். அப்படிச் செய்யாவிட்டால் அவர்களுக்கு உறக்கமே வராது. இவர்கள் எல்லாவற்றிற்கும் நல்ல நாளை எதிர்பார்ப்பார்கள்.

யூதர்கள் இயேசு ஓய்வு நாளில்கால் ஊனமுற்றவனை குணமாக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவரைத் துன்புறுத்தினார்கள். இயேசுவினாலே கால் ஊனமுற்றவன் குணமடைந்தான் '' எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும் '' [யோ:5:8] இப்படியான தைரியம் நமக்கும் வேண்டும். இறைவனுக்குச் சித்தமானால் நன்மை செய்வதால் வரும் துன்பம் இன்பமாக மாறும். நன்மை செய்ய நாள்கள் பார்த்தால் நன்மைக்குப் பதில் தீமையின் ஆட்சிக்கே வழி பிறக்கும். இயேசுவின் பின்னால் நாமும் சென்று எளியவர் வாழ்விற்கு வளம் சேர்ப்போம்.

— அன்ரனி பீற்றர்


**யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்**

**பேரானந்தப்பெருவாழ்வு அருள்வாயே!**

வண்ணைப்பதி யிலமர்ந்து வளமான வாழ்வு தரும்
ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானே
கண்ணையிமை காப்பதுபோல் எமைக்காத் தருளும்
கைலாச நாதப் பரம்பொருளே!
பெண்ணைப் பாதியாய்வைத்துப் பிறை சூடிய வள்ளலே
பேரானந்தப் பெருவாழ்வருள்வாயே!
விண்ணைத் தொடும் புகழ்தந்த வேலவன் தந்தையே
வேண்டும் வரம் தந்தருள்வாயே!

இராவசியா ருத்ரன்


**நாளை**

பங்குனி 3
புதன்கிழமை

திதி: அமாவாசை
பின்னிரவு 12.51 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
பின்னிரவு 1.28 வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம்: 4.50-6 20
ராகுகாலம்: 12.20-1.50
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசும் - புலிகளும் பேச்சை ஆரம்பிக்க நோர்வே அரசின் பங்களிப்பு அவசியம்

## யாழ் மாவட்ட சுயேச்சைக் குழு எம்.பி கோரிக்கை

கொழும்பு, மார்ச் 16

இலங்கையில் தொடரும் யுத்தத்தை நிறுத்தி அமைதியும், சமாதானமும் ஏற்பட அரசும், விடுதலைப்புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்க நோர்வே தனது பங்களிப்பை அளிக்கவேண்டும்.

யாழ் மாவட்ட சுயேச்சைக் குழு நாடாளுமன்ற உறுப்பினர் இ. இராமேஸ்வரன் மேற்கண்டவாறு நோர்வே நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிடம் கோரியுள்ளார்.

இலங்கை வந்திருந்த மேற்படி குழுவைச் சந்தித்த அவர் அவர்களிடம் சமர்ப்பித்த மகஜரிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் நன்மதிப்பைப் பெற்ற நாடுகளில் நோர்வேயும் ஒன்று. வடக்கு கிழக்கு புனரமைப்புக்கு நிதி வழங்கி வரும் நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்நாட்டு யுத்தத்துக்குத் தீர்வு காண முயற்சி எடுக்கவேண்டும்.

நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு கிடைக்கும் வரை நோர்வேயில் தஞ்சம் அடைந்துள்ள ஈழஅகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடாது.

யுத்தம் காரணமாக இந்நாட்டில் உள்ள தமிழ்மக்கள் பெரும் துன்பங்களையும் உயிர் உடைமை இழப்புக்களையும் தினமும் சந்தித்த வண்ணம் உள்ளனர்.

நாட்டின் பொருளாதாரமும் மக்களின் வாழ்க்கையும் நாளாந்தம் சீர்குலைந்து வருகின்றன.

இந்த யுத்தம் தொடர்ந்து கொண்டே போகுமானால் இந்த நாட்டில் மக்கள் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பணியில் நோர்வே போன்ற நாடுகள் ஈடுபட வேண்டும்.

கொடிய யுத்தத்தை நிறுத்தி அமைதியும், சமாதானமும் ஏற்பட அரசும், விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தைக்குத் தயார் எனக் கூறிக்கொண்டாலும் இருசாராருக்கும் இடையில் நம்பிக்கையீனம் நிலவுகின்றது.

ஆகவே இருசாராருக்கும் நம்பிக்கை ஏற்படும் வகையில் நோர்வே நாடு தனது பங்களிப்பை வழங்க வேண்டும்.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## அன்பளிப்பு

நெடுந்தீவு, மார்ச் 16

ஊர்காவற்றுறை மேற்கு மாதர் சங்கத்துக்கென ஊர்காவற்றுறை பிரதேச சபை ரூபா 80 ஆயிரம் பெறுமதியான தையல் இயந்திரங்களையும் தளபாடங்களையும் வழங்கியுள்ளதாகப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா தெரிவித்துள்ளார்.

(க-111)

# 40 ஆயிரத்து 500 தென்னம் நாற்றுக்கள் இந்த வருடம் உற்பத்தி செய்யப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ் மாவட்டத்தில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த வருடம் 40 ஆயிரத்து 500 தென்னம் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட உள்ளன.

கமநல சேவை நிலையத்தினால் 30 ஆயிரம் தென்னம் நாற்றுக்களும் விவசாயத் திணைக்களத்தினால் 10 ஆயிரத்து 500 தென்னம் நாற்றுக்களும் உற்பத்தி செய்யப்படும்.

இந்தத்திட்டங்கள் தொடர்பாக மேற்படி திணைக்கள அதிகாரிகளினால் மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கொழும்பிலிருந்து 20 ஆயிரம் தென்னம் நாற்றுக்களை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை கமநல சேவை நிலைய உதவிப்பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

(இ-5)

## இளைஞன் கைது

கல்வியங்காட்டைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புலவனார் வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த இராசா புவனேந்திரராசா (வயது 30) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவரது கைது தொடர்பாகப் படையினரால் ரிசீற் வழங்கப்பட்டுள்ளதுடன், இவர் 512 பிரிகேட் அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வடமராட்சி கிழக்கில் 50 வீடுகள் அமைக்கப்படும்

செம்பியன்பற்று, மார்ச் 16

வடமராட்சி கிழக்கில் 50 வீடுகள் அமைக்கப்பட உள்ளன.

இந்தப் பகுதியில் உள்ள வருமானம் குறைந்த வீடு இல்லாதோருக்கே வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் ரூபா மானிய அடிப்படையிலும் 25 ஆயிரம் ரூபா கடன் அடிப்படையிலும் வழங்கப்பட்டு வீடுகள் கட்ட ஒழுங்குகள் செய்யப்படும் என்று வீடமைப்பு உத்தியோகத்தர் அண்மையில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார். (இ-36)

## உற்சவத்தை முன்னிட்டு

# மண் அணையை அகற்ற படையினரிடம் கோரிக்கை

சண்டிலிப்பாய், மார்ச் 16

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் விரைவில் நடைபெறவிருப்பதால் ஆலய சுற்றாடலில் உள்ள மண் அணையையும், அந்தப் பகுதியிலுள்ள மிதிவெடிகளையும் அகற்றித் தருமாறு ஆலய இந்து தர்ம பரிபாலனசபை படைத் தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த யுத்த கால அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்த இந்த ஆலயம் சுமார் ஆறு இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்துக்குத் தெற்குப் பகுதியில் பாணாவெட்டி குளத்துக்கு சமீபமாக முன்னர் பாதுகாப்புப் படையினரால் போடப்பட்ட மண் அணை இப்போதும் இருந்து வருவதாகவும், அதன் சுற்றாடலில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் என்பன புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுவதாகவும் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் மேற்படி சபையினர் படை உயரதிகாரியிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேசமயம் முன்னர் இந்தப் பகுதியில் மேய்ச்சலுக்காக வந்த சட்டாக்காலி மாடுகள் சில இந்த மிதிவெடிகளில் சிக்கி இறந்துள்ளதாகவும், காயப்பட்டுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(இ-135)

## வடக்கு - கிழக்கு

# ஆசிரியர் சங்கங்கள் போராட்ட முஸ்தீபு

வடக்கு – கிழக்கில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு98 ஆம் ஆண்டுக்கான இடர்காலக் கொடுப்பனவை ஒரே தடவையில் வழங்க வேண்டும் என்று கோரியும் —

அதிபர்களுக்கான சம்பள நிலுவையை வழங்க வேண்டும் என்று கோரியும் —

வடக்கு — கிழக்கில் உள்ள சகல ஆசிரியர் சங்கங்களும் தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்க முஸ்தீபு செய்து வருகின்றன.

சகல ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளும் திருகோணமலையில் மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளருடன் பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

இந்தப் பேச்சுக்கள் பயனளிக்காத பட்சத்தில் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதென்று அந்த சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

(ஐ-3)

# கேள்வி அறிவித்தல்

## நிர்மாணத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

1. பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் நிர்மாணத்துறைத் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகக் கேள்விச் சபையினால் 1999 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 7 ஆந் திகதி முற்பகல் 10-00 மணிவரை பிரதம எந்திரி அலுவலகம் நிர்மாணத்துறைத் திணைக்களம் யாழ்ப்பாணத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக இக்காரியாலயத்தில் திறக்கப்படும்.
2. நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்குக் கீழே காட்டியவாறுள்ள தரத்திலும் அல்லது அதற்குமேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரும் இலங்கை தேசிய இணைந்த நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தில் (என். சீ. சீ., ஏ. எஸ். எல்) அங்கத்தவராக உள்ளோரும் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் (இக்ராட்) வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்துடன், இறைவரித் திணைக்களத்தில் பொருள்கள் சேவைகள் வரிசெலுத்துவதாகப் பதிவு செய்வதற்கான உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணம் நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் 1999 ஆம் ஆண்டு சித்திரைமாதம் முதலாம் திகதி பிற்பகல் 4-45 மணிவரை கீழ்க் காட்டியவாறு கேள்விவைப்புப் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புப் பணம் | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 1) இரு சிற்றூழியர் விடுதி திருத்த வேலைகள். மத்திய மருந்தகம் அளவெட்டி. | 3.000/- | 250/- | எம் — 9 |
| 2) மருந்தக நோயாளர் வாட் திருத்த வேலைகள் கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை. | 3,000/- | 250/- | எம் — 9 |
| 3) கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நிர்மாணித்தல் கட்டம் — 111, | 5,500/- | 250/- | எம் — 9 |
| 4) நீர்த்தாங்கி அமைத்தலும் நீர் வழங்கலும் மத்திய மருந்தகம் வரணி | 2,500/- | 250/- | எம் — 9 |
| 5) பளை வைத்தியசாலை சமயலறை திருத்த வேலைகள். | 3,000/- | 250/- | எம் — 9 |
| 6) பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை சமயலறை திருத்த வேலைகள் | 3,500/- | 250/- | எம் — 9 |
| 7) நயினாதீவு வைத்தியசாலை நீர் வழங்கலும் வடிகால் அமைப்பும் | 1.500/- | 250/- | எம் — 9 |
| 8) சிகிச்சைத் தொகுதிக் கட்டடம் அமைத்தல் ஆதாரவைத்தியசாலை கட்டம் 111 பருத்தித்துறை. | 6,000/- | 250/- | எம் — 9 |
| 9) கோப்பாய் வைத்தியசாலை அபிவிருத்தி வேலைகள் | 15,000/- | 500/- | எம் — 8 |

5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
6. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம், அத்துடன் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம் நிர்மாணத்துறைத் திணைக்கள, நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில் பிற்பகல் 4-45 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

எந்திரி ந. சுந்தரமூர்த்தி
பிரதம எந்திரி
(நிர்மாணத் திணைக்களம்)

[illegible] வீதி, யாழ்ப்பாணம்.
16 - 03 - 1999

(சி/6785)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரவில் அடிக்கடிசோதனை செய்வதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 16

படையினருடன் இணைந்து தமிழ்க்குழு ஒன்றைச் சேர்ந்தவர்களும் அடிக்கடி இரவு வேளைகளில் வீட்டில் சோதனையிட வந்து தொல்லை தருவதாகக் கொட்டடியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொட்டடி மீனாட்சியம்மன் வீதியைச் சேர்ந்த திருமதி பிறேமகுமார் ஜெயமுனிதேவி (வயது 30) என்பவரே இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்நேற்று முறைப்பாடு செய்தார்.

அவர் தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எனது கணவர் 1997 ஆம் ஆண்டு படையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவராவார். கடந்த முதலாம் திகதி தேடுதல் நடத்தப் போவதாகக் கூறி எமது வீட்டிற்குள் நுழைந்த படையினர் தேடுதல்நடத்திச் சென்ற பின்னர்மீண்டும் மீண்டும்நாம் இரவில் நித்திரையிலிருக்கும் போது எமது கதவைத் தட்டி எழுப்பி குசினி அடுப்புகளைப் புரட்டியும் உடுபுடைவைகள் வைத்திருக்கும் பெட்டிகளைக் கிளறியும் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இராணுவத்துடன் வரும் சிலர் தமிழில் கதைக்கிறார்கள். எனவே தமிழக் குழு ஒன்றைச் சேர்ந்தோரும் படையினருடன் வந்து எமக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையினால் இரவு நேரத்தில் நிம்மதியாக நித்திரை செய்ய முடியாத நிலையிலுள்ளோம். எனவே இதனை நிறுத்துவதற்கு உதவுமாறு வேண்டுகின்றோம்.

இப்படி அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ஐ-5)

# காணி சுவீகரிப்பைக் கைவிடக்கோரி ஜனாதிபதிக்கு சித்தார்த்தன் கடிதம்

கொழும்பு, மார்ச் 16

வலிகாமம் வடக்கில்பெரும் பிரதேசத்தைச் சுவீகரித்து இராணுவத்துக்கு வழங்கும் உத்தேசத் திட்டத்தைக் கைவிடுமாறு கோரி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள்வருமாறு:-

எமது காலஞ்சென்ற தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம்பிரதிநிதித்துவப்படுத்திய பிரதேசம் சுவீகரிக்கப்பட்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட இருப்பதை அறிந்து அதிர்ச்சி அடைகிறோம்.

யாழ்ப்பாணத்தில் வழமை நிலைமை திரும்புவதாயின் முதல் நடவடிக்கையாக இடம் பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர வழிசெய்ய வேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீர்கள்.

மேற்படி பிரதேசத்தை இராணுவம்பொறுப்பேற்பது, இப்பிரதேசத்திலிருந்துஇடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையே காட்டுகின்றது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் ஆகியவையும் இந்த சுவீகரிப்பின் கீழ் கையகப்படுத்தப்படவிருக்கின்றன. இந்த நடவடிக்கை அனுராதபுரம் ஸ்ரீ மகா போதியை அல்லது கண்டி தலதா மாளிகையைச் சுவீகரித்து இராணுவத்திடம் ஒப்படைந்தால் சிங்கள பௌத்த மக்களுக்கு எத்தகைய மனக்காயத்தை ஏற்படுத்துமோ அதே போன்ற மனக்காயத்தை சைவத்தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தும்என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்பிரதேசங்களை சட்டரீதியாகச் சுவீகரிக்க எடுக்கப்படும் முயற்சி போரை நீண்டகாலம்தொடர நீங்கள் திட்டமிட்டிருப்பதையே காட்டுகின்றது.

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# சனசமூக நிலையம் நன்றி தெரிவிப்பு

தெல்லிப்பழையில் உள்ள விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்களை வழங்கி அவர்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு உதவியமைக்காக யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நிலையத்துக்கு தெல்லிப்பழை பாரதி சனசமூக நிலையம் நன்றி தெரிவித்துள்ளது.

தெல்லிப்பழை விவசாயிகளுக்கு நான்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் மேற்படி நிலையத்தினால் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சமய சந்நிதியில்

கொழும்புத்துறை, மார்ச் 16

கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தின்பெருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை விசேட பூசை, ஆராதனைகளுடன் நடைபெறும். (இ-30)

★ ★ ★

வல்வெட்டித்துறை அருள்மிகு வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரர் (சிவன் கோயில்) தேவஸ்தான வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (இ-15)

★ ★ ★

பருத்தித்துறை, மருதடி ஞானவைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 15 நாள்கள் இடம்பெறும் அலங்கார உற்சவங்களின் இறுதி நாளான எதிர்வரும் 31ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடபெறும். (இ-15)

★ ★ ★

கொக்குவில் மணியர்பதி சிவசுப்பிரமணியர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 நாள்கள் இடம்பெறும் இந்த உற்சவ நிகழ்வுகளில் எதிர் வரும் 30 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 31 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ-15)

★ ★ ★

சுன்னாகம் வரியப்புலம் பூந்தோட்ட வைரவ ஆலயம் புனரமைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6 15 மணிக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. (ஐ-152)

★ ★ ★

கோண்டாவில் நெட்டிலிப்பாய் அருள்மிகு ஸ்ரீபிள்ளையார் கோயிலின் புனராவர்த்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி 41 நிமிடம் தொடக்கம் 10 மணி 49 நிமிடம் வரையில் நடைபெறும்.

மஹாகும்பாபிஷேகக் கிரியைகள இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

பன்னாலைசிவபூதவராயர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை வருடாந்த அபிஷேகக் குளிர்த்தி உற்சவம் நடைபெறும். பகல் மகேஸ்வர பூசையும் இடம் பெறும் (ஐ-152)

# டாக்டர்கள் விடுமுறையில்; நோயாளர்கள் பாதிப்பு

நெல்லியடி, மார்ச் 16

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் கடமையிலிருந்த இரு டாக்டர்கள் நீண்ட நாள்கள் விடுமுறையில் சென்றிருப்பதனால் இங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர்.

ஒப்பந்த அடிப்படையில் பணி புரியும் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும்பெருமாளும் அச்சுவேலி அரசினர் மருத்துவமனையிலிருந்து பதில் கடமைக்கு இடமாற்றமாகிய பெண் டாக்டரும் லீவில் சென்றுள்ளனர்.

தினமும் 300 க்கு மேற்பட்ட வெளிநோயாளர்கள் சிகிச்சை பெறும் இவ் வைத்தியசாலையில் தற்பொழுது பதிவு வைத்திய அதிகாரியான டாக்டர் சிவயோககுரு என்பவர் மட்டுமே கடமைகளை மேற்கொண்டு வருகின்றார். (ஐ-109)

# ஒலி பெருக்கி அன்பளிப்பு

பருத்தித்துறை, மார்ச் 16

புலோலி கிழக்கு ஸ்ரீ முதலி அம்மன் ஆலயத்துக்கு ஒலி பெருக்கி ஒன்று அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது

புலோலி சமூக அபிவிருத்தி மன்றமும் புலோலி கிழக்கு சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் இணைந்து கடனடிப்படையில் ஒலிபெருக்கியைப் பெற்று அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளது. (க-118)

# லயன்ஸ் விருது

வலி. தென்மேற்கு மாரச், 16

லயன்ஸ் கழகத்தில் பத்து வருடம் சேவையாற்றியவர்களான லயன். செ. கேசவராஜன், லயன் எஸ். ஞானராசா, லயன். என். சிவசுப்பிரமணியம் ஆகியோருக்கு சர்வதேச 'லயன்ஸ் விருது' வழங்கப்பட்டுள்ளது. (க-185)

# புதிய தபாற்பெட்டி

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 16

புன்னாலைக்கட்டுவன் பகுதி மக்கள் பாவனைக்கெனப் புதிய தபாற்பெட்டி இம்மாதம் 3ஆம்திகதி முதல் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விசமிகளால் சேதமாக்கப்பட்ட தபாற்பெட்டிக்குப் பதிலாகவே இந்தப் புதிய தபாற்பெட்டி ஆயக்கடவைப் பிள்ளையார்கோயிலுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது. (க-133)

# சிமெந்து ஊழியர்களின் பிரச்சினை பற்றி பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 16

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபனப் பிரதிநிதிகள் நேற்று தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் சி. வி. குணரட்ணவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

தமிழர்விடுதலைக்கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராஜசிங்கம், மாவை. சோ. சேனாதிராசா, தொழிற்சங்கப் பிரதிநிதி ஏ. வில்பேட் பெரேரா, எஸ். சொர்ணலிங்கம், குமாரகுருமூர்த்தி, தர்மராசா, சண்முகதாஸன் ஆகியோர்அமைச்சருடனான சந்திப்பில் கலந்து கொண்டனர்.

நேற்றைய பேச்சுக்களின் போது அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ ஊழியர்களுக்கு இதுவரை வழங்கபபடாத சம்பளத்தை உடன் வழங்குவது.

★ மூடப்பட்டுள்ள ஏனைய தொழிற்சாலை ஊழியர்களுக்கு வழங்குவது போன்று காங்கேசன்துறை சிமெந்து லிமிட்டெட் ஊழியர்களுக்கும் நூறு வீதம் மாதச் சம்பளம் வழங்க அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுப்பது.

★ சிமெந்து உற்பத்தி மீண்டும் ஆரம்பமாகும் வரை சிமெந்து லிமிட்டெட் ஊழியர்கள் 400 பேருக்கும் தொழில் நுட்பப்பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கும் பொருத்தமான வேறு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல்.

★ சிமெந்துத் தொழிற்சாலையின் செயற்பாடுகளை வேறு இடத்துக்கு மாற்றாமல் அதே இடத்தில் மீண்டும் இயக்குவதை வலியுறுத்தும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது.

மேற்படி விடயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைஎடுப்பதாக அமைச்சர் குணரட்ண உறுதி அளித்துள்ளார். (ஐ)

# மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

புனித சாள்ஸ் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி பி. எவ். சின்னத்துரை தலைமையில் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல்1.30மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளையும், சிறப்பு விருந்தினராக கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட அதிபர் அருட்திரு ஜே. நிக்கலஸும் கலந்து கொள்வர். (க-30)

★ ★ ★

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் திருமதி யோ. தேவசுந்தரம் தலைமையில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு பாடசாலை முன்றலில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். கல்விவலயத்தின் உதவிக் கல்விப்பணிப்பாளர் த. இராசலிங்கமும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற பிரதி அதிபர் க. சிவராஜா, தொலைக் கல்வி நிறுவன இணைப்பாளர் த. பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-103)

★ ★ ★

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று செவ்வாய் பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ 31)

★ ★ ★

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 1. 30 மணிக்கு அதிபர் வி. மாணிக்கம்தலைமையில்நடைபெறவுள்ளது.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ். மாவட்ட விற்பனை உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியவற்றின் தலைவர் சீ. வி. கே. சிவஞானம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக தீவகம் கல்விவலயஉடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் எம். எஸ். ஏ. ஒஸ்வோல்டும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-4)

# வலி.கிழக்குப் பகுதியில் மரமுந்திரிகைச் செய்கை

வலிகிழக்கு, மார்ச் 16

வலி.கிழக்கு பிரதேச சபைப் பிரிவில் மரமுந்திரிகைச் செய்கையில் ஊக்கமுள்ள பயனாளிகளுக்கு இலவசமாக மரமுந்திரிகை கன்றுகளை வழங்க வலி.கிழக்கு பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கான பிரதேச சபையின் விசேட நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபாவுக்கு 2 ஆயிரத்து 257 மரமுந்திரிகைக் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வீட்டுக்கும் இரு கன்றுகள் வீதம் வழங்கப் படவுள்ளன எனவும் —

மணற்தறையுடைய காணியிலேயே இவற்றை நட்டுப் பயன் பெற முடியும் எனவும் — பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ-180]

# குடாநாட்டில் ஆரம்பிக்கக் கூடிய கைத்தொழில்கள் பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 16

குடாநாட்டில் எந்த வகையான கைத்தொழில்களை ஆரம்பிக்கலாம் என்பது தொடர்பாக பிரதேச செயலர்களுடன் கைத்தொழில் அபிவிருத்திச்சபைப் பயிற்சிகள் பணிப்பாளர் ரி. எம். குலரத்தினா ஆராய்ந்துள்ளார்.

யாழ். வந்திருந்த அவர் பலதரப்பட்ட அமைப்புகளுடன் கலந்தாலோசித்து சிறிய, நடுத்தர அளவிலான கைத்தொழில்களை ஆரம்பிப்பது குறித்த பயிற்சிகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

பயிற்சி பெறுபவர்கள் சுயமாகக் கைத்தொழிலை ஆரம்பிக்க கடன் உதவி மற்றும் உபகரண உதவிகளும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாவலர் சங்கத்தின்
# 12 உறுப்பினர்கள் சாட்சியமளிக்க அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 16

காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிப்பதற்கு யாழ். மாவட்ட கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் 12 உறுப்பினர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பர்.

ஆணைக்குழுவின் முன் தமது சங்க உறுப்பினர்கள் சாட்சியமளிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று சங்கம் கோரியிருந்ததை அடுத்து இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

### மூன்றாம்...

(முதலாம் பக்கத் தொடர்)

பில் ஆர். சம்பந்தன், ரி. துரைராஜசிங்கம், சுயேச்சை எம். பியான ஆர். இராமேஸ்வரன் ஆகியோர் பங்குபற்றினர்.

அண்மையில் தாங்கள் வன்னிக்கு மேற்கொண்ட விஜயம் குறித்து கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த ஆயர் மல்கம் ரஞ்சித், வண பிதா ஜே. பி. தேவராஜா போன்றோர் அங்கு விவரித்தனர்.

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம், வன்னி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியவை குறித்து இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று கலந்து கொண்ட தமிழ் எம். பிக்கள் அனைவரும் வற்புறுத்திக் கூறியதாகத் தெரிய வந்தது.

இவ்விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கத்தோலிக்க மதகுருமார்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்கள்.

தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் ஒருமித்த செயல்பாடுகளின் அவசியமும் இச்சந்திப்பில் மதகுருமார்களால் வலியுறுத்தப்பட்டதாக தமிழ் அரசியல் தரப்புகள் தெரிவித்தன. (உ-21-6)

### உதவிப்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆம் திகதி பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினரால் இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

சட்டமா அதிபரின் அறிக்கையின் பிரகாரம் கொழும்பு மாவட்ட நீதிமன்ற பிரதம நீதிவான் சில்வா இவரை 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதித்தார். (ஐ-21)


### தேவை

- அச்சுக்கோர்ப்பாளர்
- பிளேட்டின் மெஷின் மைண்டர்

அச்சுக்கோர்ப்பாளர் பெண்பாலார் விரும்பத்தக்கது.

நேரில் வரவும்

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
(சி/6786)


## துறைமுக அதிகாரசபை
# பொறியியலாளர் குழு பருத்தித்துறை விஜயம்

நெல்லியடி மார்ச். 16

பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியை புனரமைப்பதற்காக, கொழும்பில் இருந்து துறைமுக அதிகார சபையின் பொறியியலாளர் குழு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இங்கு விஜயம் செய்துள்ளது.

துறைமுக அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் கே. ஸ்மைல் தலைமையில் ஐவர் அடங்கிய குழுவினரே விஜயம் மேற்கொண்டு, துறைமுகப்பகுதியை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையின் பொருட்டு வரைபடங்களை தயாரித்துச்சென்றுள்ளதாகத் தெரிய வந்தது.

இறங்குதுறையில் கப்பலிலிருந்து பொருட்களை துரித கதியில் இறக்குவதற்குரிய வகையிலேயே இப் புனரமைப் புப்பணிகள் மேற் கொள்ளப்படவிருப்பதாக, துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஜ-109)

### திருக்கேதீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

இறந்தவர்களில் இருவர் சண்டை நடைபெற்ற இடத்திலும் ஒருவர் ஆஸ்பத்திரியிலும் இறந்ததாகவும்—

காயமடைந்தவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும்—

தெரிவிக்கப்பட்டது. (உ-6-10-21)

### சென்னையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆரம்பமாகும். பாடையில் வைக்கப்பட்ட சவப்பெட்டிகள் சகிதம் இந்த ஊர்வலம் இலங்கைத் தூதரகம் முன்பாகச் சென்று முடிவடையும். அங்கு ஆர்ப்பாட்டம் இடம் பெறும். (ஐ-21)

### அகதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்)

றில் கலந்து கொண்டு பேசிய நோர்வே சபாநாயகர் திருமதி கிரிஸ்ரி ஹெலி ஹிரண்டல் இதனைத் தெரிவித்தார்.

இந்த விருந்துபசாரநிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் இலங்கை அகதிகளை நோர்வே அரசாங்கம் திருப்பி அனுப்பக் கூடாது என்று கூட்டாகக் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளிக்கையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ-6)


சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

**தமிழ்த் தினத்தின்**

**போது வெளியிடப்படும்**

## ஏழு நாடகங்கள்

(மறுபதிப்பு)

ஆசிரியர்கள் : குழந்தை ம. சண்முகலிங்கம்
பேராசிரியர் சி. மௌனகுரு

இடம்: **கல்லூரி மண்டபம்**

காலம்: 16-03-1999 மு.ப. 9.30 மணி (புதிய நேரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தமிழ் மன்றத்தினர்,**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

(63896)


## உசன், மிருசுவில் தோட்டங்களில்
# தேங்காய்களை படையினர் பிடுங்கிவிற்பதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 16

மிருசுவில் உசன் பகுதிகளில் தமது தென்னந் தோட்டங்களில் உள்ள தேங்காய்களை இராணுவத்தினர் பிடுங்கி விற்பனை செய்வதாக மிருசுவில் பகுதியிலுள்ள தென்னந் தோட்டங்களின் உரிமையாளர்கள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தமக்குரிய காணிகளில் அத்துமீறி நுழையும் படையினர் தென்னை மரங்களிலுள்ள தேங்காய்களைத் தாமே பிடுங்கி எடுத்து விற்பனை செய்து வருமானத்தைப் பெற்று வருகிறார்கள். இதனால் எமக்குரிய வருமானத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் தமது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் இங்குள்ள சோதனைச் சாவடிகள் மற்றும் பாதுகாப்பு நிலைகளில் சைக்கிளை விட்டு இறங்காமல் செல்பவர்களைப் படையினர் தகாத வார்த்தைகளினால் தூஷித்து வருகிறார்கள் என்றும் இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முறைப்பாடு தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கம் பலாலி படைத்தளத்தில் உள்ள மனித உரிமைகள் பிரிவு மற்றும் 52 ஆவது பிரிகேட் படைப்பிரிவுக்கும் அறிவித்துள்ளார்.

# 349 தபாற் பொதிகள் இன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ் மாவட்டத்துக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 349 தபாற் பொதிகள் இன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலமாக யாழ் எடுத்து வரப்படுவதாக பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

தபாற்பொதிகள் இன்று முதல் தரம்பிரித்து விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# வாக்காளர் அட்டை இன்று முதல் விநியோகம்

அடுத்தமாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள 5 மாகாண சபைகளுக்குமான தேர்தல் வாக்காளர் அட்டைகள்இன்று முதல் விநியோகிக்கப்பட உள்ளன.

இத்தேர்தலில் 7 லட்சத்து 10 ஆயிரம் வாக்காளர்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்துவதற்குத் தகுதி பெற்றுள்ளனர். மாவட்டச் செயலாளர்களால் விநியோகிப்பதற்காகத் தபால் திணைக்களத்திடம் வாக்காளர் அட்டைகள் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் நேற்றுத் தெரிவித்தார்.

இந்த மாதம்29 ஆம்திகதிக்கு முன்பதாக இந்த வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டு முடியும். ஞாயிற்றுக்கிழமைகளிலும் விசேட தபால் சேவை இதற்கென நடத்தப்படும்.

1997 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல்களே] இத்தேர்தலுக்கும் நடைமுறையில் இருக்கும் என்று தேர்தல்உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் வெற்றி

லாக்காலில் நடைபெற்ற ஆசிய ரெஸ்ட் கிரிக்கட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி இலங்கை அணியை ஓர் இனிங்ஸ் மற்றும் 175 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

பாகிஸ்தான் முதல் இனிங்ஸில் 594 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்தாடிய இலங்கை அணி முதல் இனிங்ஸில் 231 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில்188 ஓட்டங்களையும் மட்டுமே பெற்றுத் தோல்வி அடைந்தது. (ஐ-6)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 16

பேராசிரியர் சி. மௌனகுரு, குழந்தை சண்முகலிங்கம் ஆகியோரது நாடகங்கள் அடங்கிய 'ஏழு நாடகங்கள்' என்ற நாடகத் தொகுப்பு நூலின் மறுபதிப்பு வெளியீடு இன்று காலை 9.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

மேற்படி கல்லூரியின் தமிழ்த் தினத்தை முன்னிட்டு கல்லூரித் தமிழ் மன்றத்தினால் இந்த நூல் வெளியிடப்படவுள்ளது. (ஐ-6)

# பொருள் கடத்திய மூவர் கைது!

இராணுவக்கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் இருந்து தடை செய்யப்பட்ட பொருள்களை இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு கடத்திச் செல்ல முற்பட்டார்கள்என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்களிடம் இருந்து 250 லீற்றர் மண்ணெண்ணெய் மற்றும் பெருந்தொகையான பொலித்தீன் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-6)

### 15 இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்)

படும் போது அவர்களிடம் கடவுச் சீட்டுக்களோ அல்லது வேறு எந்த ஆவணங்களோ இருக்கவில்லை என்று கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ-6)

### அனைத்துக்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பொதுச் செயலாளர் 'காமினி அத்துக்கோறளவும் விடுத்த கோரிக்கையை அடுத்தே கூட்டம் நாளைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நாளை காலை 10.00 மணிக்கு அலரிமாளிகையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தேர்தல் கண்காணிப்புக்குழுவினரும் தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளின் செயலாளர்களும் கலந்துகொள்வர். (ஐ-6)

# இராணுவ பிரிகேடியர்..

(முதலாம் பக்கத் தொடர்)

மாறு இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சிறிலால் வீரசூரிய உத்தரவிட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரி குற்றவாளியாகக் காணப்பட்டால் இராணுவ நீதிமன்றம் அவருக்குத் தண்டனை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிலால் பிரியந்தவிடமிருந்தும் மற்றும் சிலரிடமிருந்தும் பொலீஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

இராணுவ அதிகாரி ஒருவரின் முறைகேடான செயல் குறித்துச் செய்தியாளர் பிரியந்த வெளியிட்ட விவரங்கள் உண்மையானவையா? என்பது குறித்தும் விசாரணை நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை —

பாதுகாப்புத்துறைச் செய்தியாளர் சிறிலால் பிரியந்தவை இராணுவத்தினர் அல்லது தமிழ் இராணுவத்தினர் அல்லது ஏதாவது ஓர் அரசியல் கட்சி ஆதரவாளர்கள் கடத்திச் சென்று தாக்கியிருக்கலாம் என மத்திய புலனாய்வுப்பிரிவினர்(பொலீஸ்) தெரிவித்துள்ளனர்.

சிறிலால் பிரியந்த இராணுவம், பொலீஸ் அரசியல் மற்றும் அரச பணிமனைகளில் இடம்பெறும் ஊழல்கள் பற்றி 'லக்பிம' பத்திரிகையில் எழுதிவந்தார். 'லக்பிம' வார இதழில் 'தூஷண பீஷண' (ஊழலும் வன்முறையும்) என்ற தலைப்பில் இவர் வாராந்தம் எழுதிவந்தார்.

கடந்த ஞாயிறு அதிகாலை இவரைக் கடத்திச் சென்றவர்கள் பிரியந்தவைத் தாக்கி உரப்பையில் கட்டி தெஹிவளையிலுள்ள அண்டர்சன் வீதியில் போட்டுச் சென்றுள்ளனர். அந்த உரப்பை வவுனியாவைச் சேர்ந்தது எனப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளதாக தனியார் தொலைக்காட்சி ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில்—

இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக தென்மாகாண இராணுவ உயர் அதிகாரி ஒருவர் உடனடியாக இடம் மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. (ஐ-6)

# திருத்தம்

கொழும்புத்துறை வளன்புரம் புனித சூசையப்பர் ஆலய வருடாந்தப் பெருவிழா தொடர்பாக நேற்றைய உதயனில் 5 ஆம் பக்கத்தில் வெளியான விளம்பரத்தில்— '18-03-99 — 19-03-99 வரை ஆயத்த வழிபாடுகள் தினமும் 5-30 மணிக்கு ஆரம்பமாகும்' என்று அச்சாகி உள்ளது. அது தவறாகும். அதனை '16-03-99 — 18-03-99 வரை ஆயத்த வழிபாடுகள் தினமும் 5.30 மணிக்கு ஆரம்பமாகும்' எனத் திருத்தி வாசிக்குக.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அலுவலகத்தில் 16-03-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org